Registered as a News Paper பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 13 [26-03-1993] வெள்ளிக்கிழமை ஓசை 36

## மகாபொல வழங்கல் பிற்போடப்படும்?

(யாழ்ப்பாணம்)

நாளை 27 ஆம் திகதி நடைபெற இருக்கும் மகா பொல புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் பிற்போடப் படலாம் எனத் தெரியவருகின்றது. இது சம்பந்தமாக கருத்துத்தெரிவித்த யாழ். அரச அதிபர் கா. மாணிக்க வாசகர் தனக்கு உத்தியோகபூர்வமாக இத்திகதி மாற்றம் பற்றி அறிவிக்கப்படவில்லை எனவும் இது சம்பந்தமாக மாற்றம் ஏதும் ஏற்படின் இன்று தான் உறுதிப் படுத்துவதாகவும் தெரிவித்தார். (பா)

# பலாத்காரமாக தீர்வை திணிக்க சிங்கள அரசியற்கட்சிகள் முயற்சி

## ஏழு தமிழ்க் குழுக்கள் கண்டனம் சர்வதேச மத்தியஸ்தம் தேவையாம்

[கொழும்பு]

தமிழர் பிரச்சினைக்கு சிங்கள அரசியல் கட்சிகள் பலாத்காரமாகத் தீர்வு ஒன்றைத் திணிக்க முற்படுவதாக கொழும்பிலுள்ள ஏழு தமிழ்க் கட்சிகளும் கூட்டாக விடுத்த அறிக்கை ஒன்றில் கண்டனம் செய்துள்ளன. இதேவேளை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண சர்வதேச மத்தியஸ்தம் வேண்டும் எனவும் அவை கோரிக்கை விடுத்துள்ளன.

நேற்று கொழும்பில் இவ்ஏழு கட்சிகளும் இணைந்து வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டுள்ளது இவ் ஏழுகட்சிக் கூட்டணியில் ஈ. பி. ஆர். எல். எப், ஈரோஸ், ஈ. என் டி. எல். எவ்., தமிழர்விடுதலைக் கூட்டணி ஆகியவையும் கையொப்பமிட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைக்கும்விஷயத்தில் பெரும்பான்மை சிங்கள கட்சிகள் தீர்வொன்றை வலுக்கட்டாயமாக தமிழர் மீது திணிக்க முயற்சி செய்வதாகக் குற்றம் சாட்டியுள்ளனர்: பாராளுமன்றத் தெரிவுக்குழு

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வாதத்திற்கு மேலும் வலுச் சேர்கின்றது

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணஎன அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் இன்றையநிலை புலிகளின் நிலைப்பாட்டிற்கு மேலும் வலுச்சேர்க்கிறது எனவும் வடக்கு கிழக்குப் பகுதிகளை இணைத்து வைத்திருக்கத் தம்மால்மட்டுமே முடியும் என்ற விடுதலைப் புலிகளின் வாதத்தைவலுப்படுத்தவே உதவுகின்றது என பி. பி. ஸி தெரிவித்தது.

### பி. பி. ஸி. விமர்சனம்

பி. பி. ஸி மேலும் தெரிவிக்கையில் பாராளுமன்ற தெரிவுக்குழு இப்பொழுது பயனற்ற ஒரு கேலிக்கூத்தாகவே மாறியுள்ளது. பலமாதங்களாக ஒன்றாகக் கூடியிருந்து பேச்சுவார்த்தைகள் நடாத்திவந்த பெரும்பான்மைச் சிங்கள தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் வாதிகள் இறுதியில்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## காங்கேசன் ஊடாக உணவு; இறுதிக்கட்டத்தில் பேச்சுகள்

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து சேந்தான் குளம் வீதியூடாக யாழ். குடாநாட்டுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் எடுத்துவருவது தொடர்பாக பலாலியில்இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேசசெஞ்சிலுவைச் சங்க அதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பான முயற்சிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### செஞ்சிலுவை அதிகாரி

இது தொடர்பாக இராணுவ உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த பலாலி முகாமிற்கு கடந்த செவ்வாய்க்கிழமை சென்றிருந்த செஞ்சிலுவைச் சங்க அதிகாரி நேற்று யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார். அவர் பலாலி முகாமில் சிறிலங்கா இராணுவ அதிகாரி றோகான் குலத்துங்காவுடன் விரிவான பேச்சுவார்த்தைகளை நடாத்தியதாகவும் இப்பேச்சுவார்த்தைகள் முன்னேற்றகரமாக அமைந்ததென்றும் அவர் தெரிவித்தார்.

( 10ஆம் பக்கம் பார்க்க )

## தடுத்து வைக்கப்பட்டோரை பலாலியில் சந்தித்தார்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரைச் சர்வதேசசெஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரி சந்தித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை காங்கேசன் துறைப் பாதை தொடர்பாகப் பலாலி இராணுவ உயர் அதிகாரிகளைச் சந்திக்கச்சென்ற இவ்வதிகாரி இவர்களைச் சந்தித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்துடன் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் சுமார் 60க்கு மேற்பட்டவர்கள் தமது உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி கொடுத்த கடிதங்களை இன்று அவர்களின் உறவினரிடம் ஒப்படைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (நி)

வடபகுதி வந்துகொண்டிருந்த

## வெளிநாட்டு செய்தியாளர் வவுனியாவில் தடுப்பு

(கொழும்பு)

வட பகுதி நோக்கி வந்த டென்மார்க் தொலைக்காட்சி சேவையாளர், வெளிநாட்டு பத்திரிகையாளர் ஆகியோர் வவுனியாவில் இராணுவத்தினரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

கொழும்பில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெற்றே இவர்கள் வடபகுதிக்கு தமது விஜயத்தை மேற்கொண்டிருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது. வடபகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதால் இவர்களை வடபகுதிக்கு செல்ல அனுமதிக்க முடியாது என்று இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் வடபகுதியிலிருந்து வவுனியாவிற்கு பொதுமக்கள் செல்வதை வெளிநாட்டுப் பிரதி நிதிகள் சுட்டிக்காட்டியதில் அங்கு பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றும் மேற்கொள்ளப்படவில்லை எனவும்

[10 ஆம் பக்கம் பார்க்க]

இயக்கச்சிப் பகுதியில்

## படையினர் முயற்சி புலிகளால் முறியடிப்பு

இயக்கச்சிப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக் காலை 8 மணியளவில் இயக்கச்சி மேற்கு பக்கமாக முன்னேற முயன்றனர்.

முன்னேற முயன்ற இராணுவத்தை எதிர்த்து விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதல் நடாத்தியதாகவும் கடும் சண்டையையடுத்து இராணுவம் முயற்சியைக் கைவிட்டு பின்வாங்கிச் சென்றதாகவும் தெரியவருகின்றது.

இம் முன்னேறும் முயற்சிக்கு இராணுவத்தினர் கனரக வாகனங்களை உபயோகித்தனர் என தெரியவருகிறது.

இதேவேளை ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து கடும் எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டது. வேவு விமானமொன்று 15 நிமிடங்கள் அப்பகுதியை நோட்டமிட்டுச் சென்றது. இதனையடுத்து மாசார், தர்மக்கேணி பகுதி மக்கள் இடம்பெயர்ந்து பளை நோக்கி சென்றனர். எனினும் மீண்டும் தமது இடங்களுக்கு திரும்பிவிட்டனர் என தெரிவிக்கப்படுகிறது (86)

## வீரச்சாவு

### லெப். வரகுணம் (காசிநாதன்)

கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற இரு வேறு தாக்குதல்களின்போது இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

மட்டக்களப்பு குடும்பிமலைப் பகுதியில் 20 ஆம் திகதி நண்பகல் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடாத்திய தாக்குதலின்போது லெப்டினன்ட் வரகுணம் / காசிநாதன் (தாமோதரம் தவசீலன், சித்தாண்டி மொறக்கொட்டாஞ்சேனை) வீரச்சாவடைந்தார்.



2-ம் லெப். மகாலிங்கம் (மயூரன்)

ஆனையிறவுப் பகுதியில் 20 ஆம் திகதி மதியம் சிறில

[10 ஆம் பக்கம் பார்க்க]

## பெரியபண்டிவிரிச்சானில் புக்காரா தாக்குதல்

மன்னார் பெரியபண்டிவிரிச்சான் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று சிறிலங்கா விமானப்படையின் புக்காரா விமானம் ஒன்று குண்டு வீச்சுத்தாக்குதல்களை நடத்தியது.

காலை 8.50 மணியளவில் இக்குண்டுவீச்சு இடம்பெற்றது. சேதவிபரங்கள் கிடைக்கவில்லை.

அண்மைக் காலங்களில் புக்காரா விமானங்கள் மன்னார், வன்னி மற்றும் யாழ்ப்பாணப் பகுதிகளில் குடியிருப்புக்களை நோக்கிக் குண்டுகளை வீசிவருவது தெரிந்ததே. செவ்வாய் அன்றும் கிளிநொச்சி விஸ்வமடுப்பகுதியில் புக்காரா விமானம் ஒன்று குண்டுகளை வீசியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கைதான 3 மீனவர்கள் பலாலியில் தடுத்துவைப்பு

[யாழ்ப்பாணம்]

சுழிபுரம் புளியந்துறை சவுக்கடியில் மீன் பிடித்துக்கொண்டிருக்கையில் சிறிலங்கா கடற்படையால் கைது செய்யப்பட்ட மூன்று மீனவர்களும் பலாலி இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இத் தகவலை பலாலி இராணுவ முகாம் சென்று நேற்று திரும்பிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி தெரிவித்தார்.

கடந்த 13ஆம் திகதி கைதாகிய கந்தையா சிவராசா, அம்பலம் மதியாபரணம், சின்னத்தம்பி நாகராசா ஆகியோரே பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களாவர்.

இதேவேளை இவர்கள் தமது உறவினர்களுக்கு எழுதிய கடிதங்கள் இன்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என தெரியவருகிறது.

## வரி விளம்பரம்

**விற்பனைக்குண்டு**

Super Cup C 50 Lancer Model, C. C. 50 Humming Model [பெண்களுக்குரியது] விற்பனைக்குண்டு. தொடர்பு 50, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் தியேட்டர் முன்பாக, யாழ்நகர். [4549]

**சோதிடம்**

ஜாதகக் குறிப்பு எழுதவும் கைரேகை, எண்சோதிடம் பார்க்கவும், விவாகப் பொருத்தம், வீட்டுக்கு நிலையம் நிச்சயிக்கவும் நேரில் சந்திக்கலாம். தினமும் காலை 8-30—12-30, பிற்பகல் 3-00—6-00. த.சிவானந்தன், பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், 384. கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (4560)

**ஸ்ரீ லங்கா அச்சகம்**

மக்களின் நல்மதிப்பைப் பெற்ற ஸ்ரீ லங்கா அச்சகம் (புத்த கசாலையல்ல) தனது சொந்த இடத்திலேயே (ராஜா தியேட்டர் அருகாமை ஸ்ரீகாந்தா அச்சகலேன்) இயங்கிக் கொண்டிருக்கின்ற தென்பதை அன்பான மக்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றோம். சிந்தியுங்கள்! செயல்படுங்கள்! (4563)

**தேவை**

வெற்று கோழித்தீன் பைகள் விலைக்கு வாங்கப்படுகிறது. மில்க்வைற். (சி/6267)

**விறகுச் சிக்கனம்**

கணகணப்பாக எரியும் சாண விறாட்டியினை சமையலுக்குப் பாவித்து சிக்கனம் பெருக்குங்கள். எம்மிடம் விற்பனைக்குண்டு. விலை ரூபா 1/- மட்டுமே. ''மில்க்வைற்'' (சி/6250)

**புள்ளிகள் வந்தன**

ஆரம்ப ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றியவர்களுக்கான புள்ளிகள் சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை நல்லூர் பிரிவு

## தையற் பொருட் காட்சியும் மலிவு விற்பனையும் அதிஸ்டலாபச் சீட்டிழுப்பும்

27-03-93 முற்பகல் 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணி வரை தையற் பொருட் காட்சியும், 28-03-93 முற்பகல் தையற்பொருள்விற்பனையும் அன்று பிற்பகல் கலைநிகழ்ச்சியும், பிற்பகல் 5.00மணிக்கு அதிஸ்டலாபச் சீட்டிழுப்பும், யா/ கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளன. அதிஸ்டலாபச் சீட்டுக்கள் வாங்கியோர் குலுக்கல் நடைபெறும்போது அங்கு சமுகமளிக்க வேண்டுகின்றோம். யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

செஞ்சிலுவைச் சங்கச் சேவையில்,


73. கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
24-03-1993

கௌரவ செயலாளர்

(சி-6265)

---

## அந்தியேட்டி அழைப்பு



ஆங்கீரச வருஷம் மாசிமாதம் 14 ஆம் திகதி (1993-02-25) வியாழக்கிழமை சிவபதம் அடைந்த

**திரு. சின்னையா வல்லிபுரம் அவர்களின்**


வீட்டுக்கிரியைகள் நாளை (27-03-1993) சனிக்கிழமை முற்பகல் 11-30 மணியளவில் கணக்கர் வளவு கந்தரோடையில் உள்ள இல்லத்தில் நடைபெறும். அன்னாரது ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார். உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறோம்.

கணக்கர் வளவு,
கந்தரோடை,
(4565)

இங்ஙனம்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

## அந்தியேட்டி கிரியையும் அழைப்பும்



**திரு. ஞானி ஆதிபரம்**

தோற்றம் – 18-08 1939
மறைவு – 24-02-1993



செல்வி
**அப்புச்சாமி கண்ணம்மா**

தோற்றம் – 2-07-1943
மறைவு – 8-02-1993

எங்கள் அன்பு தெய்வமே எங்களை விட்டு எங்கு தான் சென்றீர்கள்
ஐயாவே எங்கள் ஆதிபரமே அழுகின்றோம் உம்பிரிவால்
ஆசையுடன் ஆர்வமுடன் அவனியிலே மக்கள் போற்ற
ஆற்றிவிட்டீர் நாட்டு சேவை பல
அடைக்கலமாய் ஆறுதலாய் அன்புடன் வளர்த்தவரே — எங்களை
அலைபோல் தவிக்க விட்டு அனலாகிப் போனீரோ
ஆயிரம் ஆண்டுகள் மறைந்திடினும் அழியாதையா
உங்கள் சேவைதானும் என்றென்றும் எங்கள்
மனதைவிட்டு மறையாதையா உங்கள் நினைவு.

இன்று (26-03-93) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு வீட்டில் நடைபெறும் அந்தியேட்டி கிரியையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளையார் கோயிலடி,
தொண்டமானாறு.
(4562)

உங்கள் பிரிவால் துயருறும்
தாய், மனைவி. மக்கள் சகோதரர்கள்
பெறாமக்கள், உற்றார், உறவினர்.

---

சாவகச்சேரி ப. நோ. கூ.சங்கம் சாவகச்சேரி
உள்துறை எண் ஆய்வாளர் [Internal Auditer]
பதவிக்கான

## விண்ணப்பம் கோரல் 105:9

சம்பள அளவுத்திட்டம் $\frac{905 — 1605}{40 \times 5 — 50 \times 5}$

(அத்துடன் வேலையாளர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்)

மேற்படி பதவிக்கு கீழ்வரும் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து 'பொது முகாமையாளர், சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம் சாவகச்சேரி' என்ற விலாசத்திற்கு 10 - 04 - 93 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பித்து உறுதிப்படுத்தவும். மேலதிக விபரங்கள் தேவைப்படின் சங்கக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

**1. கல்வித்தகைமை:**

[1] கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப்பதிவாளர் / கணக்கியல் அல்லது கணக்காய்வு இலிகிதர் பதவியில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 11 ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்கியல் / கணக்காய்வு இலிகிதர் பதவியில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

[2] ஐக்கிய இராஜ்ஜியத்தில் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தில் இடைநிலைப் பரீட்சையில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் / கணக்காய்வு துறையிலான பதவியில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்,

அல்லது

[3] கூட்டுறவுப் பணியாளர் (உயர் தரம்) பத்திரம் / க. பொ. த [உயர் தரம்] இல் கணக்கியல் ஒரு பாடமாகக் கொண்ட மூன்று பாடங்களிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல்/கணக்காய்வு துறையிலான பதவியில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**2. வயது: 23 – 40**

**3- நிபந்தனைகள்:**

(அ) விண்ணப்பதாரர் 2 வருடங்களுக்கு மேல் யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(இ) ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும்.

(ஈ) சங்கத்தால் நிர்ணயிக்கப்படும் பிணைப்பணம் செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

(உ) தெரிவு செய்யப்படுபவர் தொடர்ந்து மூன்று வருட காலத்தில் கடமை புரிவதற்காக உறுதிப்பத்திரத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் கல்விச்சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், வதிவிட )அத்தாட்சிப் பத்திரம் பிறப்புச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தலைவர்
சாவகச்சேரி, ப.நோ.கூ.சங்கம்
சாவகச்சேரி

23-3-1993 (சி-6254)

---

## நினைவு கூருகின்றோம்...

**1993-03-26**

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்காப்படையினரால் கிளிநொச்சியில் வைத்து கைது செய்யப்பட்டு மன்னார் - முருங்கன் காட்டுப் பகுதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1987ஆம் ஆண்டு கட்டுவன் பகுதியில் பலாலிமுகாம் சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

மனோ (நாகலிங்கம் மனோரஞ்சன் - 7-ம் வட்டாரம்- புங்குடுதீவு - யாழ். )

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம் .

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6264)

நல்லூர் கல்... மாநகராட்சி ... யாழ்ப்பாணம்

# இந்திய அரசிற்கு நக்சல்பாரிகளின் சவால்

கடந்த வருடம், மே மாதம் 21-ம் திகதி ராஜீவ் காந்தி கொலையாகி ஓராண்டு முடிந்ததைக் குறிக்கும் முகமாக ஆந்திர மாநில அரசு இந்தியக் கம்யூனிசக் கட்சியின் (மாக்சியலெனினியம்) 'மக்கள் போர்ப் பாதை' குழுவினை தடை செய்வதாக அறிவித்தது. இதற்கு முன்னர் தான் இந்திய மத்திய அரசு விடுதலைப் புலிகளைத் தடை செய்திருந்தது. கோண்டபள்ளி சீதாராமையா தலைமையில் இயங்கிய இந்த நக்சல்பாரி அமைப்பு மிகத் தீவிரமாக மாவோவின் கோட்பாடுகளைப் பின்பற்றி வந்தது இவர்கள் மேல் மிக நீண்ட குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. பல முக்கிய காங்கிரசுக்காரர்கள் உட்பட கடந்த 5 வருடத்திற்குள் 657 படுகொலைகள், 413 ஆட் கடத்தல்கள், 597 பேரூந்து எரிப்புக்கள், 71 தொலைபேசி இணைப்பகத் தகர்ப்புக்கள், 68 வங்கிக் கிளைகள், 28 ரயில் நிலையங்கள் அழிப்புகள் எனப் பற்பல குற்றச்சாட்டுகள். தமது விருப்பப்படி நிலங்களைப் பங்கிட்டதாகவும் மக்கள் நீதிமன்றுகளை உருவாக்கி நீதி வழங்கப்பட்டதாகவும் மேலும் முறைப்பாடுகள். இவற்றோடு மேலதிகமாக விடுதலைப் புலிகளோடு தொடர்புகளை ஏற்படுத்தி ஆயுதங்களையும் நிலக்கண்ணிவெடி தொழில் நுட்பப் பயிற்சிகளையும் பெற்றதாக வேறு தனிக் குற்றச்சாட்டு. மக்கள் போர்ப் பாதையின் முன்னணி அமைப்புகளான முற்போக்கு இளைஞர் ஒன்றியம் (R S.U) முற்போக்கு மாணவர் அமைப்பு (R. Y. L.), பெண்கள் தொழிற்சங்க அமைப்புகளும் தடையாகின. இத்தடையோடு மக்கள் போர்ப்பாதை நக்சல்பாரிஅமைப்புதவிடுபொடியாக்கப்படும் என அப்போதைய ஆந்திர முதலமைச்சர் சனார்த்தனரெட்டி மார்தட்டினார்.

## ஆந்திர அரசிற்கு பலத்த அடி

இப்போது தடை விதிக்கப்பட்டு ஓராண்டு முடியப் போகின்றது மக்கள் போர்ப் பாதை அழிந்து விட்டதா? அல்லது அதன் செயற்பாடுகள் குறைந்து விட்டதா? மாறாக எதுவும் இல்லாதவாறு அதன் தீவிரம் அதிகரித்து விட்டது. மக்கள் ஆதரவு இல்லை உட்கட்சி மோதல், பல உறுப்பினர் விலகல், தலைவர்கள் பலர் தம்மால் கொலை என மாநில அரசு கூறி வந்தவை பொய்மைகள் என்றாகி விட்டன. நிலக்கண்ணிவெடியில் இதுவரை ஐம்பதுக்கு மேற்பட்ட பொலீசர் கொல்லப்பட்டுள்ளனர். இதைவிட அண்மையில் இவர்கள் மேற்கொண்ட இரு நடவடிக்கைகள் ஆந்திர அரசை நிலைகுலையச் செய்துவிட்டன. இவ்வருடம் தை மாதம் 26 ஆம் திகதி குடியரசுத் தினத்தன்று நடந்த மோதலில் மக்கள் போர்ப் பாதையின் முக்கிய தலைவரான வடதெலங்கான பகுதி செயலரான சங்கர் கொலை செய்யப்பட்டதாகப் பொலீசார் அறிவித்தனர். இவர்களின் மகிழ்ச்சி இரண்டு நாள் கூட நீடிக்கவில்லை. மறுதினம் ஆந்திரப் பொலீசாருக்கு பேரிடி விழுந்த தினமானது. ஆந்திர மாநிலப் பிரதி பொலீஸ் மா அதிபர் ஐதராபாத் தலைநகரிலே பட்டப் பகலிலே சுட்டுக் கொல்லப்பட்டார். கொலையான வியாஸ் நக்சலைட்டுகள் அழிப்பிலே மிக முக்கிய பங்கு வகித்த மிகத் துணிகரமான அதிகாரி எனப் பாராட்டப்பட்டவர். அவர் கொலை மட்டுமல்ல, அவர் கொலை செய்யப்பட்ட முறையும் ஆந்திர காவல்துறையைக் கதிகலங்க வைத்துள்ளது. 27-ம் திகதி அன்று வழமைபோல் வியாசும் அவரது பொலீஸ் அதிகாரிகளும் மிகப் பாதுகாப்பான பகுதியாகக் கருதப்படும் லால் பகதூர் விளையாட்டரங்கிலே உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். வாசலிலே பாதுகாவல் படையினர் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். அப்படியிருந்தும் வியாஸ் நெற்றிப்பொட்டிலே கண்ணிலே சுடப்பட்டு இறந்தார். போராளிகள் ஏற்கனவே உடற்பயிற்சியாளர்கள் போல் உடையணிந்து வியாசின் பின்னாலேயே தொடர்ந்த வண்ணம் உடற்பயிற்சியிலே ஈடுபட்டமை பின்னர் தான் தெரிந்தது. ஆறு போராளிகளும் கைக்குண்டொன்றை வீசிய பின் தப்பித்து விட்டனர். ஆந்திர

பாலகுமாரன்

பொலீசார் முகத்திலே பெருத்த கரி பூசப்பட்ட சம்பவம் ஆயிற்று இது. புரட்சிகர அமைப்புகளை நசுக்க முற்படுவோர்கள், அப்பாவி மக்களை கொலை செய்வோர் பெறும் தண்டனை இதுவென மக்கள் போர்ப்பாதை பின் எச்சரித்து அறிக்கை வெளியிட்டது.

இதன் பின் ஜனவரி30-ம் திகதி விசாகப்பட்டினம்கொய்யூரு பகுதியில் முக்கியகாங்கிரசு சட்டமன்ற உறுப்பினரான பால்ராஜ் என்பவரும் ஏனைய அரச உயர் அதிகாரிகள் ஏழு பேரும் கடத்திச் செல்லப்பட்டனர் ஆரம்பத்திலே மிகக் கடுமையான போக்கினைக் கடைப்பிடித்த ஆந்திர முதலமைச்சர் விஜயபாஸ்கரரெட்டி கொய்யூருவின் மலைக்காட்டு பகுதி முழுவதும் பொலீசாரைக் குவித்தார். வீராப்பு வசனங்கள் பேசினார். இறுதியில் வேறு வழியில்லாமல் இறங்கி வந்து நக்சல்பாரிகளுக்கு ஆதரவானவர் எனக் கருதப்படும் ஆந்திர குடியுரிமை காப்பு மன்ற தலைவரான கண்ணபிரான் உதவியை நாடினார். தானே தடை செய்த இயக்கத்திற்கு தானே தூதுஅனுப்ப வேண்டிய இக்கட்டான நிலைக்கு ஆந்திர அரசு தள்ளப்பட்டது இறுதியில் சிறையினுள் உள்ள கிராந்தி ரணதேவ் என்ற தலைவரை விடுவித்து அவர்கள் கையில் ஒப்படைக்கவும் நேரிட்டது. ரணதேவின் விடுதலையை ஒரு பெரும் அரசியல் நிகழ்வாகவே மக்கள் போர்ப் பாதை கொய்யூரு பகுதியில் நடாத்திக்காட்டிற்று இவையெல்லாம் முடிந்த பின் மத்திய அமைச்சர் சவான் கூறுகிறார் ''நக்சல்பாரிகளை ஒழிக்க இதுவே தருணம். மக்கள் ஆதரவு அவர்களுக்கு இல்லை.''

## மக்கள் போர்ப்பாதையின் தோற்றம்

உண்மை நிலை என்ன? 1978ஆம் ஆண்டு அளவில் நிலமற்ற ஏழை கூலி விவசாயிகளைக் கொண்ட வடதெலங்கானா பகுதியில் மக்கள் போர்ப்பாதை கருக்கொண்டது. கோண்ட பள்ளி சீதாராமையா இன்னும் பங்கபள்ளி சிறினிவாசு, (பிரசாத்) குருபபண்டையா (மகாதேவ்) ஆகியோரோடு இதனைத் தாபித்தார். மாவோவின் சிந்தனைகளைப் பின்பற்றுவதாகக் கூறும் இவர்கள் ஏழை விவசாயிகளை அணியாக்கி அவர்களது ஆயுதப் போராட்டம் மூலம் தமது இலக்கை அடைவதற்காக கிராமங்களில தமது நிலைகளை உறுதிப்படுத்தல், வருக்க எதிரிகளை அழித்தல் (கொடுமை செய்யும் நிலப் பிரபுக்கள், கிராம அதிகாரிகள். வட்டிக்கு பணம் கொடுத்து சுரண்டுவோர்) போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வந்துள்ளனர். இன்று இராணுவ ரீதியாக தாக்கும் வல்லமை பெற்று வளர்ந்துள்ளனர். ஏ.கே. உட்பட பல நவீன ஆயுதங்களை இவர்கள் அண்மைக் காலமாகப பயன்படுத்தி வருகின்றனர். பெருமளவு ஆயுதங்கள் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது. வடதெலங்கானாவின் முக்கிய ஆறு மாவட்டங்களான அதிலாபாத், கரீம் நகர், வாரங்கல் மேதக், நிசாமாபாத் போன்றவை இவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. இங்கு மாற்று அரசொன்றையே இவர்கள் நடாத்தி வருகின்றனர். இதைவிட ஏனைய ஆந்திர மாவட்டங்களான ராயல சீமை கடற்கரைப் பகுதிகளிலும் இவர்கள் செல்வாக்குப் பரவுகின்றது (ஆந்திர மாநிலம் 4 ராயலசீமை 8 கடற்கரை 9 தெலங்கானா மாவட்டப் பகுதிகள் கொண்டது.) ஆந்திராவில் மட்டுமன்றி மத்தியமாநிலப் பிரதேச காட்டுப் பகுதிகளிலும் மகாராஷ்டிரா மாநிலத்தின் சில பகுதிகளிலும் இவர்கள் ஆதிக்கம் பரவி வருகின்றது. தடைக்குப் பின்னர் முழுமையான தமது போக்குவரத்து, உணவு, செய்தித்தொடர்புகள் போன்றவற்றிற்கு கிராம மக்களையே நம்பியுள்ளனர். அண்மையில் கொலையான வடதெலங்கானா மக்கள் போர்ப்பாதை தலைவரான சங்கரின் மறைவிற்காக இப் பகுதி கிராம மக்கள் 3 நாள்கள் உணவு ஏதும் உட்கொள்ளாமல் துக்கம் அனுட்டித்தனர். ஒரு தொலைபேசி அழைப்பு மூலமோ ஒரு சுவரொட்டி மூலமோ இவர்கள் தமது ஆணைகளை நிறைவேற்ற முடியும். அண்மையில் மதுபான விற்பனை நிலையங்களை மூடிவிட உத்தரவு பிறப்பித்ததைத் தொடர்ந்து 180 மதுபான விற்பனை நிலையங்கள் நிசாமாபாத்தில் மூடப்பட்டன. இன்னும் அதிலாபாத், கரீம்நகர்ப் பகுதிகளில் பொலீஸ் நிலைய வளவுக்குள் மட்டும் தான் இப்போது சாராய விற்பனை நடக்கின்றது இவர்கள் தமது கட்டுப்பாட்டில் உள்ள கிராமங்களை 'தலம்' எனப்படும் தலைமறைவு ஆயுதக்குழு உறுப்பினர்கள் மூலமே நிருவகித்து வருகின்றனர். நிலப் பங்கீடு செய்வதிலிருந்து நீதி வழங்குவது வரை இவர்கள்தான். இன்று தாமே தயாரித்த உள்ளூர் எறிகணை செலுத்திகளை வனங்களில் இவர்கள் பரீட்சித்துப் பார்ப்பதாகத் தெரிகின்றது. தடை செய்யப்பட்ட இந்நிலையிலும் இவர்கட்கு அஞ்சி தெலங்கானா மாவட்ட எம். எல். ஏக்கள், எம். பிக்கள், அமைச்சர்கள் எல்லோரும் ஐதராபாத் நகருக்குப் பாதுகாப்புத் தேடி ஓடி வந்து விட்டனர். என்றாலும் எல்லா நக்சல்பாரி இயக்கங்களைப் போலவே இவர்கள் மத்தியிலும் உள் முரண்பாடுகட்குக் குறைவில்லை. அண்மையில் இவ் அமைப்பின் தாபகரான சீதாராமையாவே வெளியேற்றப்பட்டார். இவரின் இடத்தில் இப்போது இருப்பவர் கணபதி எனப்படும்கரீம்நகரமுன்னாள் ஆசிரியர் ஒருவராவார். சீதாராமையாவின் கொள்கை விளக்கங்களை விட நடைமுறையில் தீவிர செயற்பாடுகளை விரும்புபவர் கணபதி. (70 வயதைத் தாண்டிய கோண்டபள்ளி சீதராமையா சில தினங்களுக்கு முன் பத்திரிகை ஒன்றிற்குத் தமது மாவோயிச கோட்பாடு பற்றி விளக்கம் அளிக்க மறைவிடத்தில் இருந்து வந்த போது கைதாகியுள்ளார்.) இவரின் விலகல் இயக்கத்தில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது என 'புரொன்ட் லைன்' இதழே கூறுகின்றது. கணபதியின் தலைமையில் மேலும் தீவிரத் தன்மையே எதிர்பார்க்கப்படுகிறது.

## நசுக்கப்பட்ட மக்களின் குரல்

ஆந்திராவைப்போல் பலமாக இல்லாவிட்டாலும் பீகார், ஒரிசா போன்ற மாநிலங்களில் வறுமையின் கோரப் பிடிக்கும், தீண்டாமையின் கொடுமைக்கும். பட்டினிச் சாவிற்கும் நடுவினில் தள்ளாடும் ஏழை மக்களிடையே வேறு சில நக்சல்பாரி குழுக்கள் இயங்குகின்றன. இன்னும் 70 வீதமான இந்திய கிராமப் புறங்கள் நக்சல்பாரிகள் தோன்றுவதற்கோ, வளர்வதற்கோ ஏற்ற சூழலையே கொண்டுள்ளன. கிராமப் புறங்களில் நிலப் பிரபுத்துவ முறையின் கொடுமைகள் இன்னும் வேறு வடிவங்களில் நிலவுகின்றன. இந்தியப் பொதுவுடைமை இயக்கம் உண்மையிலேயே நிலமற்ற ஏழைத் தெலங்கானா விவசாயிகள் நடாத்திய வீரம் செறிந்த தெலங்கானா போராட்டத்திலே( 946 - 51) தான் தோற்றங் கொள்கிறது. அதனாலேயே இன்னும் தெலங்கானாப் பகுதி புரட்சியின் விளைநிலமாக உள்ளது. அன்று நற்துணையாகவிருந்த பொதுவுடமை இயக்கம் 1950 களின் பின் இந்திய கம்யூனிசக்கட்சி (சி. பி. ஐ) என்றும் இந்திய மாக்சிய கம்யூனிசக் கட்சி (சி. பி. எம்.) என்றும் பல நூறு நக்சல்பாரி மாக்சிய லெனினிய (சி. பி. எம். எல்.) குழுக்களாக இன்று பிரிந்து விட்டது. இடைவிடாத சித்தாந்த மோதல், முடிவில்லாத விவாதங்கள். இந்தியப் புரட்சியை எங்கிருந்து தொடுப்பது. தொடர்வது என்பதிலே இன்றுவரை முடிவு காணாது வரட்டுச் சித்தாந்தம் பேசி பல குழுக்கள் இன்று வரட்சி நிலையை அடைந்து விட்டன. என்றாலும் 1940 களில் தெலங்கானாவில் தோன்றிய புரட்சித்தீ பின்னர் மேற்குவங்கத்தில் நக்சல்பாரி கிராமத்திலே பற்றியது. சாருமசூம்தார் இன்னும் கனுசனயால் (இவர் இப்போதுதான் சிறையிலிருந்துவிடுதலையாகி கல்கத்தா நகரின்மூலையொன்றில் அமைதியாக இருக்கிறார். போன்றோரால் நிலமற்ற ஏழைவிவசாயிகள் அணிதிரட்டப்பட்டு போராட்டசக்திகளாக்கப்பட்டனர். நிலப்பிரபுக்கள் பிடியிலிருந்து பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலம் இவர்கட்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. இதைக்கண்டு தாளாமல் 1970களில் இந்திரா காந்தி அம்மையார் நிலப்பிரபுக்கள் சார்பாக தலையிட்டு மிகக் கொடுமையாக இக்கிளர்ச்சியை அடக்கினார். தந்தை தெலங்கானவில் செய்ததை மகள் நக்சல்பாரியில் செய்தார்.

இதே அடக்கு முறை தான் இன்னும் வட தெலங்கானா பகுதியில் ஆந்திர அரசால் தொடரப்படுகின்றது. 12000 க்கு மேற்பட்ட ஏழை விவசாயிகள் இன்று தடாசட்டத்தில் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர். இன்னும் எண்ணிக்கை தெரியாத பொதுமக்கள் நக்சல்பாரிகளுடன் மோதல்கள் என்ற போலி மோதல்களில் கொல்லப்பட்டு விட்டனர். எந்தவகையிலும் ஆந்திர அரசின் அடக்கு முறைகளை நியாயப்படுத்தமுடியாது என மனித உரிமை அமைப்புகள் கூறுகின்றன. எது எப்படி இருப்பினும் தெலங்கானாவிலும் நக்சல்பாரியிலும் தோன்றிய புரட்சிகரஉணர்வுகளை இன்று வரை தக்க வைத்து மக்கள் போர்ப்பாதை இயக்கம் இந்தியாவின் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்கட்காக தனதுசெயற்பாடுகள் மூலம் குரல் எழுப்பிய வண்ணமே உள்ளது என்பது குறிப்பிட வேண்டியவிடயமே.

## சமையல் குறிப்பு

### குரக்கன் பொரிமா

செய்முறை:

முளைதிறன் உள்ள குரக்கனை சுத்தமானபருத்தித் துணியில் பொட்டலமாக கட்டி அளவாக நீர்விட்ட பாத்திரத்தில் 14 மணித்தியாலம் ஊறவிடவும் பின்அதனை எடுத்து ஒரு தட்டையான பாத்திரத்தில்துணியுடன் பரவி நிழலில் வைக்கவும் 48 மணித்தியாலம் கழித்துமுளை கட்டிய குரக்கனைதாச்சிச்சட்டியில் கொஞ்சம் கொஞ்சமாக போட்டு பதமாக வறுத்து எடுக்கவும். பின் அதனை மாவாக அரைத்து தேவைக்கு அளவாக சீனி அல்லது சக்கரை, தேங்காய்ப்பூ என்பன கலந்து உருண்டைகளாக்கி உண்ணலாம். இப் பொரிமா உழுந்து கடலை, பயறு, அரிசி என்பன வறுத்து இடித்து செய்யும் பொரிமாவைவிட சுவையில் மாற்றமில்லாது இருக்கும்.

# இந்திய இராணுவத்தை இலங்கைக்குள் வரவழைத்த அமெரிக்கா

மு. திருநாவுக்கரசு

கெடுபிடி யுத்தம் முடிந்த பின்பு கிழக்கைரோப்பாவில் தேசிய இனங்கள் பல பிரிந்து சென்று தனி அரசுகளாக மாறின. இக்கெடுபிடி யுத்தம் நீங்கியமையால் உலகெங்கும் உள்ள ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் விடுதலை அடையுமென நம்பப்பட்டது. ஆனால் கிழக்கைரோப்பாவுக்கு வெளியே இது பொதுவான சாத்தியப்பாட்டுக்குரியதாய் இருக்கவில்லை. இதற்கு உலகத் தலைமை ஏற்றுள்ள அமெரிக்காவின் நலன்களும் ஒரு முக்கிய காரணமாகும்.

கிழக்கைரோப்பாவில் தேசிய இனங்கள் பிரிந்து தனி அரசானதிலும் அமெரிக்காவின் நலன்கள் உண்டு. அதே வேளை உலக அரங்கில் தேசிய இனங்கள் தனிஅரசு ஆகாமைக்கும் அமெரிக்காவின் நலன்கள் காரணமாக உள்ளன. அத்துடன் பிராந்திய அரசுகளின் ஆதிக்கமும் நலன்களும் கூட இதற்கு இன்னொரு காரணமாகும்.

கெடுபிடி யுத்தம் முடிந்தமையானது ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் பிரச்சனையில் ஒரு நெகிழ்வுத்தன்மையை ஏற்படுத்தியுள்ளதெனலாம். ஆனால் இந்த நெகிழ்ச்சியானது ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் விரும்புகின்ற வழியில் அவற்றுக்குகந்த தீர்வுகளை கொடுக்கக்கூடியதென்றில்லை.

இதற்குரிய யதார்த்தத்தை கெடுபிடி யுத்தம் முடிந்த சூழலிலிருந்து சற்று பரிசீலிப்பது நலம். கெடுபிடி யுத்த சூழலில் நீதி நியாயங்களுக்கு அப்பால் அமெரிக்கா, சோவியத் ஆகிய இருபெரும் வல்லரசுகளும் ஒன்று ஆதரிப்பதை மற்றயது எதிர்ப்பதாகவே இருந்து வந்தது.

கெடுபிடி யுத்தத்தின் சாராம்சத்தை மூன்றாம் உலகநாடுகளின் நோக்கு நிலையிலிருந்து விளங்கவேண்டியது அவசியமாகும். கெடுபிடி யுத்தமானது முதலாவது அர்த்தத்தில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பெருவல்லரசுகளின் நலனுக்கான யுத்தமாகும். மேலைத் தேசத்தவர்களால் பனிப்போர் (Cold War) என அழகியபெயரில் அழைக்கப்படும் இக்கெடுபிடி யுத்தம் முதலாம் உலகுக்குப் பனிப்போராயிருந்த அதே வேளை மூன்றாம் உலகிற்கு அது ஒருநெருப்பு யுத்தமாகவே அமைந்தது. முதலாம் உலகின் பனிப்போர் மூன்றாம் உலகில் பெரும் யுத்தங்களாக வெடித்தன. நேரடியாகப் பார்க்குமிடத்து முதலாம் உலகின் பனிப்போரால் மூன்றாம் உலகில் உண்டாகிய நெருப்பு யுத்தம் இராணுவ ரீதியில் முதலாம் உலகின் வல்லரசு சமநிலையைப்பேணவும் பொருளாதார ரீதியில் மூன்றாம் உலகின் வளங்களை முதலாம் உலகம் அள்ளிச் செல்லவும் வழிவகுத்தது.

அதேவேளை கெடுபிடியுத்தத்தை மறைமுகமாகப் பார்க்குமிடத்து மூன்றாம் உலகில் நிகழ்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தினால் மூன்றாம் உலகின் பொருளாதார தொழில் நுட்ப வளங்கள் பின்தள்ளப்பட்டன. அதாவது மூன்றாம் உலக நாடுகளில் ஏற்பட்ட உள்நாட்டுச் சண்டைகளிலும் நாடுகளிடையேயான யுத்தங்களிலும் இந்நாடுகளின் முதல்தர மூளைசாலிகள் தமது மூளை வளத்தை பொருளாதார, தொழில் நுட்பப் பக்கம் திருப்பாது யுத்தத்தின் பக்கம் திருப்பினர். இதனால் மூன்றாம் உலக நாடுகளின் உற்பத்திச் சக்திகள் வீழ்ச்சியடைந்தன; வளரமுடியாது போயின உற்பத்திப் பண்டங்களின் தரமும் கீழ்நிலையில் இருந்தது. இதனால் முதலாம், இரண்டாம் உலகங்களின் உற்பத்தித் தரங்களுடன் மூன்றாம் உலகின் உற்பத்திப் பண்டங்கள் போட்டியிட முடியாது போயின.

முதலாம் இரண்டாம் உலகின் சந்தையாக மூன்றாம் உலகம் இலகுவில் மாறவும் நீடிக்கவும் முடிந்தது. இது கெடுபிடி யுத்தத்தில் ஈடுபட்ட இருதரப்பினருக்கும் லாபகரமாய் அமைந்தது.

கெடுபிடி யுத்தமானது நேரடி அர்த்தத்தில் பல்வேறு காரணங்களின் நிமித்தம் முடிவுக்கு வந்துள்ளது. ஆனால் தொடர்ந்தும் மூன்றாம் உலகின் வளர்ச்சியின்மையைப் பேணுவதிலேயே முதலாம் இரண்டாம் உலகங்களின் நலன்கள் தங்கியுள்ளன.

இதனால் நவகாலனித்துவத்திற்குத் தலைமை தாங்கும் ஏகப் பெரு வல்லரசாகிய அமெரிக்கா தனது தொடர் நலன்களுக்கு மூன்றாம் உலகம் பிரச்சனைகளின் கூடமாக இருப்பதையே விரும்புகிறது. இவ்வாறு மூன்றாம் உலகில் பிரச்சனைகளையும், குழப்பங்களையும் நீடிப்பதற்குரிய சாதனங்களுள் ஒன்று இந்நாடுகளில் காணப்படும் தேசிய இனப் பிரச்சனையும் வேறு உள்நாட்டு அயல்நாட்டுப் பிரச்சனைகளுமாகும். இப்பிரச்சனைகள் முற்றிலும் தோற்கடிக்கப்படும ஒன்றாகவோ அல்லது தீர்க்கப்படும் ஒன்றாகவோ ஆகிவிடாது. பிரச்சனையைப் பிரச்சனையாகவே வைத்திருக்க அமெரிக்கா விரும்புகின்றது. அது சார்ந்த சூழல்களுக்கேற்ப தேசியஇனப் பிரச்சனையானது சில விசேஷ பரிமாணங்களைப் பெறுமேயானாலும் பொதுவில் அது பிரச்சனையாக நீடிப்பதையே அமெரிக்கா விரும்புகிறது.

சூழல் சார்ந்த தனது நலன்களுககேற்ப அமெரிக்கா சில தேசிய இனப்பிரச்சனைகளில் மாறுபட்ட நிலைப்பாட்டைக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவது போல, சில பிரச்சனைகளில் வரலாற்றின் தர்க்க பூர்வ வளர்ச்சிப் போக்கும் ஒடுக்கப்படும் இனங்கள் பக்கம் சாதகமான முடிவு எடுக்க வைப்பது உண்டு.

இதே போல அமெரிக்கா தனது நலன்களுக்காக பிரச்சனையைப் பிரச்சனையாக வைத்திருக்கும் மட்டத்திற்குக் கீழ் சென்று ஒடுக்கப்படும் இனங்களுக்கு எதிராகப் பெரும் பாதகமாக நடக்கக்கூடிய யதார்த்த நிலைமைகளும் உண்டு. எனவே ஒரு பொது விதியை மனதிற் கொள்ளும் அதே வேளை அதற்கு மேலும் கீழும் செல்லக்கூடிய யதார்த்தத்தை மனதிற் கொள்ளவேண்டிய அவசியமும் உண்டு. ஒடுக்கப்படுகின்ற குறிப்பிட்ட ஒரு தேசிய இனத்தின் சூழலையும் யதார்த்தத்தையும் ஆராய்வதன் மூலம் இப் பொது விதிக்குப் புறம்பாக நிகழக்கூடிய யதார்த்த நிர்ணயத்தைப் புரிந்து கொள்ளலாம்.

சோவியத் யூனியனிலிருந்து கடலோர எல்லையைக் கொண்ட பால்டிக் நாடுகள் பிரிந்து செல்வதன் மூலம் சோவியத்தின் கேந்திர அடிப்படைப் பலம் ஒன்று குறைந்திடும் என்ற காரணத்தால் பால்டிக் நாடுகள் சோவியத்திலிருந்து பிரிய வேண்டுமென அமெரிக்கா விரும்பி ஆதரவளித்தது. ஆனால் சோவியத்தின் இஸ்லாமிய மாநிலங்கள் சோவியத்திலிருந்து பிரிந்துவிடக்கூடாதென அமெரிக்கா பெரிதும் விரும்பிய போதிலும் தர்க்க பூர்வ நிலைமைகள் அதற்கு இடம் கொடுக்காமையாலும். யதார்த்த நிர்ணயம் அதற்கு இடம் கொடுக்காமையாலும் இறுதியில் அவை பிரிந்து சென்றன. இந்நிலையில் அம்மாநிலங்களின் பிரிந்து செல்லும் நிலையைஅமெரிக்கா அங்கீகரிக்க நேர்ந்தது.

ஈராக்கிலிருந்து குர்திஷ் இனம் பிரிந்து செல்வதற்கான தனிநாட்டுக் கோரிக்கையை அமெரிக்கா இன்றுவரை அங்கீகரிக்கவில்லை என்பதை கருத்திற் கொள்ளும்போது தேசிய இனங்களின்சுயநிர்ணயஉரிமையில் அதற்கு எவ்வித அக்கறையும் இல்லை என்பது தெளிவாகும். எனவே தான் கெடுபிடி யுத்தம் முடிந்த சூழலில் அமெரிக்கா, தேசிய இனங்களின் போராட்டத்தை அங்கீகரிக்கும் என்று சொல்வதற்கில்லை. அமெரிக்கப் படைகள் வளைகுடாவில் தரித்திருந்தும்கூட, ஈராக்கைப் பலவீனப்படுத்த வேண்டும் என்றெண்ணிப் பெரும் தாக்குதலில் ஈடுபட்டிருந்தும் கூட பிராந்திய நலனும் ஈராக்கின் உள்நாட்டு ஸ்திரமின்மையும் நீடிக்க வேண்டுமெனக் கருதி குர்திஷ் பிரச்சனையைத் தீர்த்து வைக்க அமெரிக்கா விரும்பவில்லை.

இத்தகைய ஒரு பரந்த பின்னணியில் வைத்தே உலக நாடுகளில் எழுந்துள்ள தேசிய இனப் பிரச்சனைகளையும் அதன் உள்நாட்டு, வெளிநாட்டுப் பரிமாணங்களையும் பரிசீலிக்க வேண்டியுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சனையைப் பொறுத்தவரை அமெரிக்கா மேற்குறிப்பிட்ட தனது சர்வதேச மூலோபாயத்தின் படியும் பிராந்திய சூழலுக்கேற்றபடியும் அதைக் கையாள முயல்கிறது. இதன்படி இலங்கையின் இன்றைய இனப்பிரச்சனையானது அதன் கொதிநிலை தணிந்து மித நிலை அடைவதை அமெரிக்கா விரும்புகிறது. ஆனால் ஒடுக்கப்படும் இனத்துக்குச் சாதகமாக அது தீர்ந்து விடக்கூடாதெனவும் இன்றைய நிலையில் விரும்புகிறது. இதற்கு அதன் அரசியல் மற்றும் சர்வதேச, வர்த்தக நலன்களே காரணமாகும்.

இத்தகைய நலன்களைக் கொண்ட சுற்றோட்டத்தில் இலங்கைத் தீவைப் பொறுத்தவரையில் கொழும்புடனான உறவுக்கே அமெரிக்கா முன்னுரிமை கொடுக்க வேண்டியுள்ளது. ஆனால் இனப்பிரச்சனையை மித நிலைக்குக் கொண்டுவருவதற்கு அது கொழும்பின் மீது அழுத்தங்களையும் போடவேண்டியுள்ளது.

ஈழத் தமிழ் மண்ணில்இன்று நிகழ்ந்து கொண்டிருக்கும் தமிழீழப் போராட்டத்தின் மீதும் விடுதலைப் புலிகள் மீதும் சீற்றம் கொண்டுள்ள இந்தியா, மிதநிலையானதுபுலிகள் நிலைக்க வாய்ப்பேற்பட்டுவிடும் எனக்கருதும் நிலையில் மித நிலை உருவாவதை விரும்பவில்லை.

மேற்படி அமெரிக்காவின் விருப்பம் இலங்கையில் முற்றிலும் நிறைவேறுவதை இந்தியா விரும்பாது. அதே வேளை இலங்கைசார் நலன்களின் பேரால் இந்தியாவுடன் அமெரிக்கா முழு அளவுடன் பகைக்கவும் மாட்டாது. இந்த இரண்டுக்கும் நடுவேதான் இலங்கைசார் அமெரிக்காவின் அரசியலும் அமையும். கொழும்பின் மீதான மேற்குலகின் அழுத்தங்களில் ஒன்றாக இலங்கைக்கான ஆயுத விநியோகத்தில் மேற்குலகம் ஒரு சிறு அளவு தளர்ச்சியைக் காட்டியது. ஆனால் ரஷ்யா அத்தளர்ச்சியை நிரவக் கூடிய வகையில் இலங்கைக்கான ஆயுத விநியோகங்களுக்குத் தயாராக உள்ளது. ரஷ்யாவின் இத்தகைய விநியோகத்துக்குப் பின்னால் இந்தியாவின் கரங்கள் உண்டு எனச் சந்தேகப்பட இடமுண்டு.

ரஷ்யாவின் நேரடியானஅல்லது ரஷ்யாவின் மூலமான இத்தகைய ஆயுத தளபாட உதவிகளின்மூலம் இராணுவத்தின் மனோதிடத்தை உயர்த்தி அரசியலில் ஒரு சக்தியாக வளரும் இராணுவத்தை சமாதானத் தீர்வில் அக்கறையற்றதாக மாற்றலாம் என எண்ணக்கூடும். இலங்கையின் யதார்த்தத்தில், இனப்பிரச்சனையின் தர்க்க பூர்வ நிலையில் சமாதான ரீதியான தீர்வுக்கு இடமில்லை என்பது வெள்ளிடைமலை. ஆனாலும் சமாதானத்துக்குச் சற்று வாய்ப்பான சூழல் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் பல்வேறு அரசியல் சக்திகள் கண் அயராது செயற்படவும் செய்கின்றன.

ஒரு காலத்தில் நேரடியாக முழுக்க முழுக்க சிங்கள ஒடுக்கு முறையாளர் பக்கம் நின்ற அமெரிக்கா இப்பொழுது மித நிலை பற்றிப் பேசுகின்றது. இம் மித நிலையானது தமிழருக்குச் சாதகமானது போன்றதொரு தோற்றப்பாட்டைத் தரக்கூடியதாக அமைந்துள்ளது. இலங்கைத்தீவை பொறுத்து இந்தியாவுடனான அமெரிக்காவின் அரசியலில் இப்போதைய அதன் மிதநிலைக் கொள்கை ஒரு பரிசோதனையாகவே அமைந்துள்ளது. ஆனால் வரலாற்று விதியை அவதானிப்போமானால்அமெரிக்காவின் மிதநிலைக் கொள்கை ஏதே ஒரு வகையில் தமிழருக்கு நீண்டகாலப் போக்கில் பாதகமான சூழலை ஏற்படுத்தவே உதவும்.

1980 களில் இலங்கை இந்திய அரசுகளுக்கிடையிலான முரண்பாட்டைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதற்காக திட்டவட்டமாக அமெரிக்கா சிங்கள ஒடுக்குமுறையின் பக்கம் நின்று தமிழருக்கு எதிராகச் செயற்பட்டது. இலங்கையில் அமெரிக்க அரசின் செல்வாக்கு பெருவளர்ச்சி அடைந்ததன் விளைவு இந்திய இராணுவத்தின் வரவுக்கு வழிவகுத்தது. அமெரிக்கா எவ்வளவுதான் சிங்கள அரசின் பக்கம் நின்றபோதிலும் இறுதி அர்த்தத்தில் இந்திய இராணுவத்தின் வரவைத் தடுக்க அதனால் முடியவில்லை.

ஆனால் 1990 களில் அமெரிக்காவின் தந்திரோபாயம் மாறியுள்ளது ஈழத் தமிழருக்கும், இந்திய அரசுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாட்டைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த அமெரிக்கா முனைகிறது. முதலாவது கட்டத்திலும் சரி, இரண்டாவது கட்டத்திலும் சரி, அமெரிக்காவின் நோக்கம் ஒன்றாகவே உள்ளது. இப்பொழுதும் அமெரிக்க அரசின் அடிப்படை ஆதரவு சிங்கள அரசின் பக்கமே உண்டு.

முழு நீள அரசியல் ஓட்டத்திலும், அரசியல் விளைவிலும் இருந்து பிரச்சினையை ஆராய்ந்தால் ஜே. ஆர். ஆட்சிக்கு பக்கபலமாக நின்று கொண்டு இனப்பிரச்சனையைப் பெரிதும் சீரழித்துள்ள முதற்தர சக்தி அமெரிக்காதான். உண்மையான அர்த்தத்தில் இந்தியாவின் வரவிற்கு (படையெடுப்புக்கு) அமெரிக்காவே காரணம். அமெரிக்காவுக்கான கதவுகளை தனது நாட்டிற்குள் திறந்து விட இந்தியா அஞ்சுவதில்லை. அத்துடன் இலங்கைக்குள் அமெரிக்காவின் வளர்ச்சியையும் இந்தியா பொறுப்பதில்லை. இந்நிலையில் இந்திய - அமெரிக்க அரசுகளுக்கிடையிலான விளையாட்டில் மிதிபடுவது அப்பாவித் தமிழர்கள்தான்.

**மொடேன் எடியுக்கேஷன் சென்ரர்**
**(கரவெட்டி)**
**G.C.E (O|L) மீட்டல் வகுப்புக்கள் (பகல் நேரம்)**
**ஆரம்பம்: 27-03-1993** காலை 10.00 மணி, சனிக்கிழமை
8—9 ஆங்கிலம்: திரு. போஷியஸ் ஆசிரியர் 9—10 தமிழ்: திரு. விசுவாசம் ஆசிரியர்
10—11 விஞ்ஞானம் திரு. மகேந்திரம் ,, 11—12 கணிதம்: திரு. யோகராஜா ,,
பயிற்சி வகுப்பு
கணிதம்: திரு. இராமகிருஸ்ணன் ஆசிரியர் திரு. சிவராஜா ஆசிரியர்
(3418) — நிர்வாகி.

# மாகாணசபை தேர்தலும் ஜனாதிபதி பிரேமதாசாவும்

தென்னிலங்கை அரசியல் சதுரங்கத்தில் யானைகளும், குதிரைகளும், பிஷப்புகளும் மட்டுமன்றி ராசாக்களும், ராணிகளும் கூட நகரத் தொடங்கியுள்ளனர். ஏழு மாகாண சபைகளும் கலைக்கப்பட்டு விட்டன என்ற பிரகடனமும், ஏப்ரல் முதல் வாரத்தில் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்ற தேர்தல் ஆணையாளரின் அறிவிப்பும் இந்தச் சுறுசுறுப்புக்கு ஏதுவாகின. திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி என்னும் கூட்டணி; வாசுதேவ நாணயக்காரவின் நவசமசமாஜக் கட்சியும் அதனோடு இணைந்த கட்சிகளும் என்று மற்றொரு கூட்டணி; லலித் - காமினி கோஷ்டியின் ஜனநாயக ஐக்கியதேசியமுன்னணி; பிரேமதாசாவின் ஐக்கிய தேசியக் கட்சியும் அதனோடு இணைந்த கட்சிகளும் என ஒரு நான்கு முனைப்போட்டி மாகாண சபைத் தேர்தல்களின் போது ஏற்படலாம் என்றே பொதுவாக எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தேர்தல்களில் 93 லட்சம் பேர் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர். 50,000 பொலீசார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

## மாகாண சபைகள் தேவைதானா?

மாகாண சபைகள் கலைக்கப்பட்டு தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் கோரப்பட்டுள்ள போதும் கூட மாகாண சபைகள் என்னும் அமைப்பை இல்லாதொழிக்க திரைமறைவு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபாரிசு ஒன்றின் அடிப்படையில் மாகாண சபைகளை ஒழிக்கலாம் என்றும், அத்தகைய ஒழிப்பு ஒன்றைச் செய்வதற்கு தேவைப்பட்டால் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தலாம் என்றும் ஐ. தே. கவின் ஒரு சாரரார் கருதுகின்றனர். மொனராகல மாவட்ட எம். பி. யான டி. எம். ஆரியரத்தினா இத்தகைய ஒரு கருத்தை ஐ. தே. க. எம். பிக்களிடையே மட்டுமன்றி எதிர்க்கட்சி எம். பிக்களிடமும் பரப்பி வருகின்றார். இந்த விடயம் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் கடந்த அமர்வின போது சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திருமலை மாவட்ட எம் பியான எம். கே. டி. எஸ். குணவர்த்தனா மூலம் கிளப்பப்பட்டுள்ளது. மாகாண சபைகள் அமைப்பு என்பது ஒரு வீண் செலவு என்றும், இந்த யானையைக் கட்டித் தீனி போடுவது தேவையற்றது என்றும் தென்னிலங்கை அரசியல்வாதிகளில் சிலர் எண்ணுகின்றனர்.

மாகாண சபைகள் அமைப்பதற்கு தேவையான சட்டப் பின்புலத்தை உருவாக்குவதற்காக கொண்டுவரப்பட்ட சட்டமூலங்களையே பாராளுமன்றத்தில் தாக்கல் செய்ய மறுத்தவரான இன்றைய ஜனாதிபதியும் மாகாணசபை அமைப்பு ஒழிக்கப்படுவதற்கு ஆதரவாகவே இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

கச்சேரி முறையை ஒழிப்பது என்று, கூறிக்கொண்டு பிரதேச சபைகள் அவசரம் அவசரமாக அமைக்கப்பட்டு வருகின்றன. அபிவிருத்தி நடவடிக்கைகள் கிராம மட்டத்தில் திட்டமிடப்படவேண்டும் என்றும்,

அரசாங்க சேவைகள் கிராம மட்டத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றது. என்றும்கூறப்பட்டாலும் கூட பிரதேச சபைகள் அமைப்பு பூரணமாகச் செயற்படத் தொடங்கிய பின்பு மாகாண சபைகள் என்பது யானை உண்ட விளாங்கனி போலத்தான் இருக்கும். எனவே பிரதேச சபைகள்அமைப்பதற்கு ஜனாதிபதி காட்டும் ஆர்வமானது மாகாணசபை அமைப்பை ஒழிப்பதற்கான முதற்படி என்றே பலரையும் சந்தேகிக்க வைக்கிறது.

## மாகாணசபையின் இன்றையநிலை

"1988ஆம்ஆண்டில் அதிகாரங்களைப் பரவலக்க வேண்டும் என்று வடக்கு கிழக்கு மக்கள்கேட்டுக் கொண்டனர். இந்த நோக்கத்திற்காகவே மாகாண சபைகள் அமைக்கப்பட்டன." இது சிறி லங்கா ஜனாதிபதி பிரேமதாசா இரு வாரங்களின் முன் இவ்வாறு கூறினார். ஜனாதிபதியின் கூற்றை ஆராயப் புகுவது எமது நோக்கமல்ல. ஆனால் வடக்கு - கிழக்கு மக்களுக்காகவே மாகாணசபை அமைக்கப்பட்டது எனக் கூறப்பட்டாலும் கூட வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டும்தான் அச்சபை செயற்படவில்லை என்பது சுவாரஸ்யமானதாகும்.

இந்திய- இலங்கை அரசுகளுக்கிடையிலான ஜே. ஆர்- ராஜீவ் ஒப்பந்தம் உயிரிழந்ததைப் போலவே அது ஈன்றெடுத்த மாகாணசபை என்னும் குழந்தையும் தனது இறுதி மூச்சுக்களை இழுத்து விட்டுக் கொண்டு வருகின்றது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற கவர்ச்சிகரமான போர்வையின் கீழ் அமுலாக்கப்பட்ட மாகாணசபைகள் இனப்பிரச்சினையைத் தீர்க்கவும் இல்லை. அது தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தவும் இல்லை. அது தமிழ் மண்ணில் செயற்படவுமில்லை எனினும் ஏனையஏழுமாகாணங்களிலும் உள்ளூர் பிரமுகர்களுக்கு பொதுப் பணத்தில் பகட்டுவாழ்வு வாழ்வதற்கு அது வழி அமைத்துக் கொடுத்தது. அதாவது மாகாண சபைகளின் அதிகாரம், அது நிறைவேற்ற வேண்டிய இலக்கு, தமது கடமைகள் என்ன என்பது பற்றி எல்லாம் கவலை கொள்ளாத அரசியல்வாதிகள் ஏதோவொரு கட்டத்தில் மாகாண சபை என்ற பெயரில் கூடிக் கதைக்கவும், பாஜிரோக்கள் வாங்கி ஓடித்திரியவும், எடுபிடிகளை நியமித்து உள்ளூர் அரசியல் பலத்தைக் காட்டவும் மாகாண சபை ஏற்றதொரு வாய்ப்பை வழங்கியது.

## மாகாண சபைகளும் சிறிலங்கா சுதந்திர கட்சியும்

மானங்கெட்ட வகையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் பிறந்த ஈனக் குழந்தை தான்மாகாணசபை. எனவே இதனைத் தூக்கவும் மாட்டோம், துடைக்கவும் மாட்டோம் என்று வீராப்பு பேசி 1988இல் ஒதுங்கிக் கொண்டவர்கள் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான சுதந்திரக் கட்சியினர். அதன்பின்னர் இது காலவரையில் மாகாணசபை அமைப்பு இனப்பிரச்சினைத்தீர்வுக்குஏற்றது என்றோ. இந்த அடிப்படையிலாவது அதிகாரப் பரவலாக்கம் செய்து தமிழ் மக்களின் குறைபாடுகளைத் தீர்த்து அவர்களது அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய முயலுவோம் என்றோ, அல்லது பொருத்தமான மாற்றுத் திட்டம் ஒன்றை முன்வைப்பது பற்றிய எண்ணம் ஒன்றையோ மறந்து போய்த்தானும் சுதந்திரக் கட்சி உச்சரிக்கவில்லை. ஆனால் இப்போது மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவும் பதவி நாற்காலிகளைப் பிடிக்கவும் கூட்டணி அமைப்பதில்வரிந்து கட்டிக் கொண்டு நிற்கின்றது. இது சுதந்திரக் கட்சியின் கொள்கையில்லாஅரசியலுக்கு பொருத்தமான ஓர் எடுத்துக் காட்டுஇதுமட்டுமல்லதேர்தல் ஜனநாயக அரசியல் வாதிகளுக்கு பதவிச்சுகமும், சொகுசு வாழ்வுக்கு ஓர் அடிப்படைக் கருவியும்தான்தேவையேதவிர மக்களின் நலன் என்பதிலோ அல்லது தேசத்தின் நலன் என்பதலோ கிஞ்சிற்றும் அக்கறை கிடையாது என்பதையும் எடுத்துக் காட்டுவதாகும்.

## பிரேமதாசா ஆட்சியின் தந்திரோபாயங்கள்

பிரேமதாசா ஜனாதிபதியாகப் பதவியேற்றது முதல் கடைப்பிடித்துவரும்தந்திரோபாயங்கள் எதிரணியினரை திக்குமுக்காடச் செய்பவையாக உள்ளன என்பது பொருத்தமே. பிரேமதாசா அரசு முதலாவதாக பிரச்சினைகளைஒட்டு மொத்தமான சமூகப்பிரச்சினையாக அணுகி அடிப்படைப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்குப் பதில்தனி மனிதப் பிரச்சினைகளாக அணுகி திருப்திப்படுத்துவதிலேயே குறியாகஇருக்கின்றது. உதாரணமாக ஜனாதிபதிநடமாடும் செயலக சேவைமூலம் தனிமனிதர்களை அணுகி அவர்களது சொந்த பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதன் மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதாக ஒரு பிரமை ஏற்படுத்தப்படுவதைக் குறிப்பிடலாம். இரண்டாவதாக எதிர்நோக்கும் அவசரப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்குப்பதிலாக புதிய பிரச்சினைகளை உருவாக்குவதன் மூலம் பழையவற்றை முனைமழுங்கச்செய்வதுஎன்பதையே கடைப்பிடித்து வருகின்றது. மூன்றாவதாக அபிவிருத்திப் பணியில் நாளாந்தம் ஈடுபடுவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும் பிரசாரம். ஜனசவிய என்றும் வறுமைஒழிப்பு, ஆடை தயாரிப்பு தொழிற்சாலைத் திட்டம், பத்துலட்சம் வீடமைப்பு திட்டம் என்றவாறான தனது அபிவிருத்தித் திட்டங்களை அடுக்கிச் செல்வதன் மூலம் மக்களின் மீட்சிக்கான திட்டங்கள் தன்னிடமே இருக்கின்றது என்பது போலவும்; முடியுமானால் எதிரணியினர் இவற்றிற்கு மாறாக தமது திட்டங்களை மக்கள்முன்வைக்கட்டும்என்று சவால் விடுவதும் பிரேமதாசாவின் தனிப்பாணியாகியுள்ளது.

இந்த வகையில் தான் எதிர்நோக்கும் அவசரப் பிரச்சினைக்கு தீர்வு காணாமல் இழுத்தடிக்கவும், புதிய சர்ச்சைகளை கிளப்பும் ஓர் அரங்கமாகவும் மாகாண சபைத் தேர்தல் களம் அமையப் போகின்றது. இதிலும் குறிப்பாக மாகாண சபைகள் கலைக்கப்பட்டு வேட்புமனுக்கள் கோரப்பட்டாலும் கூட அவசரகால சட்ட விதிகளின் கீழ் தேர்தலை ஒத்திப்போடும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு என்பது ஒருபுறம். பாராளுமன்றத் தெரிவுக் குழு மாகாண சபைகளை ஒழிப்பதற்கான சிபாரிசு ஒன்றை முன்வைக்கும் எனின்மாகாண சபைத் தேர்தலுக்குப்பதிலாக மாகாணசபைகளே தேவையா என்பதற்கு சர்வசன வாக்கெடுப்பு கோரப்படலாம் என்பது மறுபுறம். இந்த இரண்டு நிகழ்வுகளில் எது அடுத்தது என்பதை ஊகிக்க இன்னும்சிறிதுகாலம்பொறுத்திருக்க வேண்டியதுதான்.

இளையவன்

# அழுகல் குருதி நோய் - செப்ரிசீமியா

இன்று சிறிலங்கா இனவாத அரசால் மேற்கொள்ளப்படும் தமிழீழ தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கையாலும இடம் பெயர்ந்து அடிப்படைச்சுகாதார வசதிகளின்றி அகதிமுகாம்களிலும், உறவினர்வீடுகளிலும் போதிய உணவு, உறைவிட வசதியின்றி வாழ்க்கை நடாத்திக் கொண்டிருக்கும் நிலையால் ஏற்பட்டுள்ள மன, உள நெருசல்களாலும் சிறிலங்கா அரசால் திட்டமிட்டு மேற் கொண்டு வரப்படும் பொருளாதாரத் தடையால் ஏற்பட்டுள்ள போசாக்கின்மை, மருந்துப் பொருள்களின் தட்டுப்பாடு, மருத்துவ வசதியீனங்கள் பொருளாதாரபோக்குவரத்து வசதியீனங்களாலும் செப்ரிசீமியா என்னும் நோய் மிகவும் மோசமாகப் பரவிவருவதோடு ஒரு சமூகப்பிரச்சினையாகவும் அதிகளவு மரணத்திற்குக் காரணமான நோயாகவும் இது திகழ்கிறது. எனவே ஒவ்வொருவரும்இந்த நோயின் குரூரத்தை அறிவதன் மூலமும் அதிகளவு மரணத்திற்குக் காரணமான இந்நோயை ஏற்படாது தடுக்கலாம். அல்லது குறைக்கலாம். இதன் மூலம் அதிகளவு மரணத்தை குறைக்கவும் இக்கட்டுரை வழிசமைக்கும என எதிர்பார்க்கப்படுகிறது.

## செப்ரிசீமியா என்றால் என்ன?

இது குருதியில் பக்ரீரியாவினதும் அதனால் சுரக்கப்படும் நச்சுப்பதார்த்தமும் குருதியில் நிறைந்து காணப்படும் நிலை செப்ரீசீமியாஎனப்படும். இந்த நோய் நிலையில் அதிகளவு புரதம் பக்ரீரியாவினால் பிரித்து அழிக்கப்படும். இதன் மூலம் உடல் பலவீனப்படுவதோடு நோய் எதிர்ப்பு சக்தியும் இழக்கப்படுகிறது. இதனால் இன்னோரன்ன பல நோய்க்கிருமிகளும்இவர்களை இலகுவில் தாக்கி நோய்களை உருவாக்குகின்றன. இதனால் நோயாளி மரணமடையும் நிலை ஏற்படுகிறது.

## நோய் ஏற்படுவதற்குரிய காரணிகள்:-

இதற்கு போசாக்கின்மை ஒரு முக்கியமான காரணியாக திகழ்கிறது. அத்துடன் மருத்துவ வசதியீனம், மருந்துப் பொருள்கள் தட்டுப்பாடு, நோய் பற்றிய போதியவிளக்கம் இன்மையும், அககறையீனமும் காரணிகளாக அமையலாம். உதாரணமாக காய்ச்சல் இது பல நோய் நிலைகளிலும், பலகாரணங்களாலும் ஏறபடலாம் ஆனால் சாதாரணமாக மக்கள் காய்ச்சல் என்றதும் பனடோல் போடுவார்கள். அத்துடன் அவர்களது சிகிச்சை முடிவடைந்துவிடும். காய்ச்சலுக்கான காரணிக்கு சிகிச்சை நடக்காது எனவே காரணி தன்னை பெருக்கி தனது செயற்பாட்டை தீவிரப்படுத்தும். இப்படியாக நோய் தீவிரமடைந்தபின்பே வைத்தியசாலையை பெரும்பாலானோர் அணுகுகின்றனர். இதனால் சிகிச்சை போதிய பலனைக்கொடுக்காது இதனால் மரணம் சம்பவிக்கின்றது.

செப்ரீசிமியா பெரும்பாலும் குழந்தைகளையே அதிகம் தாக்குகின்றது. ஏனெனில் சாதாரணமாக குழந்தைகளில் நோய்எதிர்ப்பு சக்தி மிகவும் குறைவு. அத்துடன் சிறிலங்கா அரசால் இன ஒழிப்புக்காக திட்டமிட்டுச் செயற்படுத்தப்படும் பொருளாதாரத் தடைகாரணமாக ஏற்பட்டுள்ள போசாக்கின்மையால்எதிர்ப்பு சக்தி அற்றுப்போவதால் நோக்கிருமிகள் மிக இலகுவாக குழந்தைகளைத் தாக்கி அதிகளவு குழந்தைகளின் மரணத்திற்கு காரணமாகின்றது.

## குணங்குறி:-

ஆரம்பத்தில் நடுக்கத்துடன் கூடிய அதியுயர் காய்ச்சலும், பின்னர் இடைவிட்ட காய்ச்சலும் காணப்படும். அத்துடன் வாந்தி, வயிற்றுநோ. மூச்சுக்கஷ்டம், வெளியேறும்சலத்தின் அளவுகுறையும், வியர்வை காணப்படும், சிலரில் வலிப்பு ஏற்படலாம். சில சமயம்அதிர்ச்சிக்குரிய குணங்குறிகள் காணப்படும்.

## சிகிச்சை:-

இக்குணங்குறிகள் காணப்படின உடனடியாக வாயால் ஒன்றும் குடிக்கவோ உண்ணவோ, கொடுக்காது உடனடியாக வைத்தியசாலைக்குச் சென்று வைத்திய ஆலோசனைப் பெற்று சிகிச்சை பெற வேண்டும். கவனிக்காது விட்டால் மரணம் சம்பவிப்பது தவிர்க்கமுடியாது போய்விடும்

## தடுப்புமுறை:-

இந்நோயை நல்ல சுகாதார பழககவழக்கங்களாலும், நல்ல

(9 ஆம் பக்கம் பார்க்க)

பாவன்னாசீனா

சிறுகதை

# விழுதுகள் விழுங்கப்படும் போது......

பாரதிப்பிரியா

சூரியன் மெள்ளமெள்ள மேற்கு வானுள் புதைந்து கொள்ளத் தொடங்குகிறான். மெலிதான இருட்போர்வைக்குட் வீதிகள்புகுந்து கொள்ள வானத்தில் நட்சத்திரங்கள் மினுங்கிகொண்டிருந்தன.

''ஐயோ! இண்டைக்கு சரியா நோப்போச்சு'' திகிலுடன் முணுமுணுத்தபடி தேவதா சைக்கிளை வேகமாக மிதித்தாள். தின்னவேலிச்சந்தியில் இன்னமும் சந்தடி குறையவில்லை. எங்கோ சாப்பாட்டுக் கடையில்பெரிய சத்தத்தில் சினிமாப்பாட்டு ஒன்று ஒலித்துக்கொண்டிருந்தது. பெல்லை அடித்தபடி வேகமாக வலப்புறம் திரும்பி ஓட்டினள் தேவதா. வீட்டில் தாய் செல்லம்மா கட்டாயம் இவளை தேடிக்கொண்டிருப்பாள் 'ஒரு வேளை நடந்த நடந்து கள்ளியங்காடடுச் சந்திக்கே அம்மா வந்திருப்பா' எண்ணிக் கொண்டாள் தேவதா. இவளின் வேகமான சைக்கிளோட்டலைப் பார்த்து 'இப்பபெட்டைகள் சைக்கிளோடத் தொடங்கி கண்மண்தெரியாம பறக்குதுகள். உங்க பாரேன் போறதை'' யாரோ வீமபாக உரத்து விமர்சித்துக்கொண்டார்கள்.

மெல்லச் சூழ்ந்த இருளைப் பார்க்க கொஞ்சம் திகிலாக இருந்தது. ''இந்தா கள்ளியங்காடடுச் சந்தி வந்திட்டுது. இனி ஐஞ்சு நிமிச ஓட்டம் தானே'' இளைக்க இளைக்க ராச வீதியிலே திரும்பியவள் பாதையில் இருந்த வைரவரை வணங்கியபடி அந்த ஒற்றையடிப் பாதைபோலிருந்த ஒழுங்கைக்குள் சைக்கிளை ஓட்டினாள். இருமருங்கிலும் பசேலென்ற தோட்டம் இரவின் பிடிக்குள் கறுத்துக் கிடந்தது. எங்கோ 'படபட்டட்'மிசின்ஒன்று இரைந்து கொண்டிருந்தது.

''அப்பாடா'' என்றபடி அந்தக் குடிசையின் படலைக்குள் பிறேக் அடித்து படலைத் தகரத்தில் கையைவைத்தாள். உள்ளே வந்தவளிற்கு பலத்த அதிர்ச்சி. அம்மா முற்றத்தில் தான இருந்தாள். ஆனால் ஒன்றுமேப்பசவில்லை. இவளை ''ஏன நேரம் பிந்தினாய்?'' என்றுகூட கேட்கவில்லை.

சைக்கிளைஉருட்டிச்சென்று அந்தச் சின்னக குடிசையின் விறாந்தை எனப்படும் பகுதியின் ஓரமாக விட்டுவிட்டு, அவசரமாக பின்புறம் சென்று முகம் கழுவிவிட்டு வந்தாள் தேவதா. செல்லம்மா இன்னும் அசையாமல் வானத்தில் தெரிநத நட்சத்திரங்களையே வெறித்துக்கொண்டிருந்தாள். தேவதாவிற்கு தாயின மௌனம் சிரிப்பைக்கொடுத்தாலும் தாயுடன் பேசாமல் இருந்ததால்அங்குநிலவிய மௌனம் தாங்கமுடியாததாக இருந்தது மெல்ல நகர்ந்து தாயருகே வந்தாள்.

''என்னம்மா இண்டைக்கு சுணங்கிப்போச்செண்டு கோவமேம்மா'' மெதுவாக கேட்டாள். மௌனமாக இருந்தவள் இவளைஒருமுறை திருமபி மட்டும் பார்த்து விட்டு பேசாமலிருந்தாள்.

''அம்மா மாசத்தில ஒரு நாள் தானேம்மா. நீ வந்து பார்த்தால்கூட தாங்கமாட்டாய் அம்மா. அவ்வளவுக்கு அக்காமார் காயபட்டிருக்கினம். என்னத்தைச் செய்தாலும் அதுகளுக்கு உதவி செய்தால் தானம்மா நிம்மதியாக இருக்கு. இண்டைக்குபபோல இனிமேல் பிந்திவரமாட்டன். மன்னிச்சுக்கொள்ளுங்க. என்ர அம்மா எல்லே'' தாயின் கோபத்தால் நொந்துபோனவளாக செல்லம்மாளின் மடியில் முகபபுதைத்து தேம்பினாள் தேவதா.

''அழாதேம்மா தேவி. உனக்கு எங்கட நிலைமை தெரியும்தானே! அப்பாபோன பிறகு பென்சன் வரும் மட்டும் நானபட்டபாடு. பிறகு உன்ர அண்ணை இயக்கத்துக்கு போனது. மங்குளத்தில...'' மேலும் தொடரமுடியாது தவித்தாள் செல்லம்மா. உண்மைதான். தேவதாவின் அண்ணன் அருண் வீரச்சாவடைந்துஇரண்டாண்டாகிவிட்டது அடிமேல் அடியாக விழ துன்பத்தை சுமந்து சுமந்தே வாழ்க்கையில் ஒரு பிடிப்பில்லாமல் போய்விட்ட செல்லம்மாவிற்கு ஒரே ஒரு ஊன்றுகோல் தேவதாதான். அதிலும் அவன் போராட்டத்தில் ஈடுபாடாக இருப்பது மிகவும் கவலையாக இருந்தது. அண்ணன் வழியே ஒரு வேளை தங்கை தொடர்ந்தால் என்ற கவலை அவளிற்கு.

''என்னம்மா நீங்க நான் இயக்கத்துக்கு போயிடுவேனெண்டே பயபபிடுறீங்க. சாப்பிட்டு சாப்பிடடு சோம்பிக் கிடக்காம உயிரையே மதிக்காம போராடுகிற அக்காவைக்கு உதவிசெய்தா என்னமா? அண்ணா சொன்ன மாதிரி நான் நல்லாபபடிச்சு டொக்டரா உத்தியோகமபார்ப்பன'' வருங்காலக் கனவுகளுடன் தேவதா சொன்னபோது செல்லம்மாள் கண்களிலும் ஓர் குட்டி நட்சத்திரம். இருட்டில் ஓர் ஊன்றுகோல் தட்டுப்பட்டாற்போல.

''என்னமோம்மா கடவுள் இஷ்டப்படிதான்'' என்றவள் ''அம்மா இண்டைக்கு உவர் கந்தையற்றை மேள் சுதாக்காவை கண்டனான். கை ஒன்றும் இல்லையம்மா. பாவம்! கொஞ்சங்கூட கவலையிலலாமல் சிரிச்சபடியே இருந்தவ'' வேகமாக சொல்லி முடித்தாள்தேவதா. ''பாவம் கந்தையர் கஷ்டப்பட்டு வளர்த்து என்னத்தை கண்டது. சரி சரி முறைக்காதை வா சாப்பிட'' என்றபடி எழுந்து உள்ளே சென்றாள் செல்லம்மா.

அம்மாவைநினைக்கும்போது அழுவதா சிரிப்பதா என்றிருந்தது. அண்ணாவின் வீரச்சாவின் பின் போராட்ட ரீதியில் தேவதா ஈடுபட ஆரம்பித்ததுமே தாய் மெள்ள தூரவிலகுவதை உணர்ந்திருந்தாள் தேவதா. ''அம்மாவுக்கு பயம். தானும் சப்போட்டாக இருந்து அண்ணாவைப்போல போயிடுவனெண்டு''முணுமுணுத்தபடி விறாந்தைக்குள் காலெடுத்து வைத்தாள் தேவதா. எதிரே அப்பாவும் அண்ணாவும் அருகருகே படமாக தொங்கிக் கொண்டிருந்தார்கள் அம்மா ஏற்றியிருந்த விளக்கின் ஒளியில் அருணின் இதழ்கள் இவளிடம் ஏதோ யாசிப்பது போலிருந்தது. அப்பாவின் இதழில் என்றுமே தவழும் புன்னகைதான். ''தேவி! தேவிக்கண்ணம்மா'' என்று அண்ணன் அழைப்பது போலிருக்கவே கண்களை துடைத்துக் கொண்டாள்.

''அண்ணை! இந்த முறை ஓ. எல்இல என்ர றிசல்ட்டை பாருங்கவேன். நீங்க சொன்ன மாதிரி எ.எல் இல விஞ்ஞானம் படிப்பேன்'' போட்டோவிலிருந்த அண்ணனிடம் சொல்வது போல முணுமுணுத்தாள் ''என்ன! ஆரோட பிள்ளை கதைக்கிறாய்'' குசினியிலிருந்து செல்லம்மாள் கேட்டாள் ''ஒண்டுமில்லையணை'' என்ற தேவதா உள்ளே போய் சாப்பிடத் தொடங்கினாள். தேவதா இப்படித்தான் மாதத்தில் ஏதவதொருநாள் ஆஸ்பத்திரிக்குச் சென்று காயமடைந்த போராளிகளிற்கு உதவி செய்வாள். சொல்லபபோனால் அவளுக்கு நிறைய நாட்கள் அங்கு செல்ல ஆசை தான். ஆனால் செல்லம்மாவைவருத்தக்கூடாது என்பதற்காக ஒரு நாள் மட்டுமே போவாள். மாதமொரு நாளாவது அங்கு போகாவிட்டால் தேவதாவிற்கு நிம்மதியாகவேஇராது. அன்றைக்குக் கூட அதிக போராளிகள் காயப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டிருந்தார்கள். அவர்களின் தியாகத்தையும், மனவுறுதியையும் நினைததபோது தேவதாவிற்கு கண்களில் நீர் முட்டியது

ஃ ஃ ஃ

நடு இரவில் எங்கோ நாய்கள் ஊளையிட்டுக் கொண்டிருந்தன. சிந்தனைகளோடு படுத்த தேவதா நித்திரையின்றி திரும்பிப் படுத்தாள். டொம் டொம் ம்...ம் .. ம .. ''டொம்டொம்...'' ''அம்மா ஆட்டிலறிஷெல் அடிக்கிறாங்களணை'' மெதுவாகதாயிடம் கிசுகிசுத்தாள் செல்லம்மாளும் ''ஓம் பிள்ளை உங்கவலு கிட்டடியில கேக்குது.'' என்றாள்.

''அம்மா இஞ்ச பங்கருமில்லை. பக்கத்தில கிளிஅன்ரி வீட்ட போவமே'' தாயை ஆறுதற்படுத்த கேட்டாள். நடுங்கிக் கொண்டிருந்த செல்லம்மாள் ''பிள்ளை நீதான் கவனம். ஐயோ இதென்ன சோதனை; கடவுளே!'' என்று அரற்றத் தொடங்கினாள். இதற்கிடையில் எங்கோ மரங்கள் முறியும் ஓசை. ''இண்டைக்கு ஒரே இடத்திலஅடிக்கிறான் பாவி. இதில இருங்கம்மா குசினிபபடலையை சாத்திப்போட்டு வாறன்.'' என்றபடி அவசரமாக ஓடினாள் தேவதா.

''டொம் டொம்'' பலத்த சத்தம். ''எங்கட குசினிபக்கமாய் தான் விழுந்திருக்க வேணும்'' நினைக்குமுன்னரே ஆங்காங்கே ஷெல் துண்டுகள் பறந்தன. அடுக்களை ஜன்னலூடு வந்த ஷெல்துண்டொன்று தேவதாவின வயிற்றுப்புறத்தில்பதிந்தது 'ஐயோ அம்மா'' வீறிட்டுஅழவேண்டும் போலிருந்த உணர்வுடனேயே மயங்கிப் போனாள்.

ஃ ஃ ஃ

தேவதாவிற்கு மெல்ல நினைவுதிரும்பியது. கண்களை திறக்கவே முடியவில்லை. யாரோ இவளை தன்மடியில் தாங்கியிருந்தார்கள். ''அம்மாவாக இருக்க வேணும்.'' நினைவுகளைதொடர்ச்சியாக கோர்க்கவே முடியவில்லை. 'இனியென்ன பாவம் செல்வம். அடுத்ததை ஆயத்தப்படுத்த வேண்டியது தான்'' மிக மிக இரகசியமாக யாரோ சொன்னார்கள். வெளியேயும் ஆட்களின் நடமாட்டம் சலசலப்பாக கேட்டது''கடைசியா அடிச்ச ஷெலிலதான்'' முன்பு சொன்ன அதே குரல் மீண்டும் யாரிடமோ முணுமுணுத்தது.

தேவதாவிற்குஅழவேண்டும் போலிருந்தது. அம்மா சின்னதாகவிக்கொண்டிருந்தாள். இன்னமும் அவளுக்கு நம்பிக்கை இருந்திருக்கவேண்டும் கடவுளிடம் கூடதான். யாரோ டொக்டரை அழைத்து வர போயிருக்க வேண்டும். மீண்டும் தேவதாவிற்கு மயக்கம் வருவதுபோல இருந்தது.

அப்பாவும் அண்ணாவும் வருகிறார்கள். அண்ணா அருண் இவளிடம் ரைபிள் ஒன்றை நீட்டுகிறான். ரைபிள்கள், ஸ்டெதஸ்கோப்புகள், சயனைட் குப்பிகள், புத்தகங்கள்.. மாறி மாறி நினைவு வருகிறது. யாரோ இவளிற்கு பட்டம் சூட்டுகிறார்கள். இவள் பெரிய கோட்டும் ஸ்டெதஸ்கோப்புமாக அம்மாவை சோதித்துக் கொண்டிருக்கிறாள். யாரோ ''டொக்டர் தேவதா'' என்றழைக்கிறார்கள். இடையே அருண்வந்து ரைபிளைகெடுத்து ''மேஜர் தேவதா'' என்கிறான். மீண்டும் ஸ்டெதஸ்கோப்புகள், சயனைட் குப்பிகள்... நினைவலைத் தொடர்புகள் மெள்ள அறத்தொடங்கின ''தேவியம்மா தேவி'' ஆற்றாமையோடு செல்லம்மாள் விக்கினாள். தேவதாவிற்கு தன் பட்டமளிப்பு விழாவை அம்மா குழப்புவது போலிருந்தது. அம்மாவைஏச வேண்டும்போல... இல்லை ஒருமுறை அவளை பார்க்க வேண்டும் போல மீண்டும் குழப்பம். அருண் நீட்டிய சயனைட் குப்பியை கைநீட்டி வாங்குவது போலிருந்தது. அதை தாயிடம் காட்ட திரும்புவதாகநினைத்தவளின் கரம் ஒரு முறை தன்னிச்சையாக உயர்ந்து சட்டென தாழ்ந்தது. எங்கும் ஒரே இருட்டுப்போல.

''என்ர ராசாத்தி...''செல்லம்மாளின் உரத்த அழுகை வீடு முழுக்க எதிரொலித்தது. ஆனால் தேவதாவின் காதில் மட்டும் அது கேட்கவில்லை.

★


## வேலை வாய்ப்பு
## விற்பனை பிரதிநிதி

சுறு சுறுப்பும் சுயமாக சிந்தித்து செயல்படக் கூடிய இளைஞர்களை TASTY நிறுவனத்தில் விற்பனை பிரதிநிதியாக பணிபுரிய அழைக்கின்றோம்.

விண்ணப்பதாரர் தகுந்த கல்வித் தகைமை உடையவராயும், திறமையுடன் பணி புரிந்து நிறுவனத்தின் வளர்ச்சியுடன் சேர்ந்து வளரக் கூடியவர்களாக இருத்தல் விரும்பத்தக்கது.

வேதனம் ஊக்கத்துடன் தொடர்புடையதாக இருக்கும்.

சுய விபரங்களுடன் 29-03-93 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.


நிர்வாக முகாமையாளர்

**ரேஸ்ற் லைன் இன்டஸ்றீஸ் [தனி] லிமிரட்**

14,சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (சி/6263)




(சி 6(14)



# தாயகம் நோக்கிய பயணம்

## ஓர் அறிமுகம்

**2000** ஆண்டுகளுக்கு முன்பு தாம் இழந்ததாகக் கூறப்படும் தாயகத்தை உலகின் பல பாகங்களிலும் சிதறி வாழ்ந்த யூதர்கள் எப்படி மீண்டும் பெற்றார்கள். அதைப்பெற, பெற்றபின் அதைக் காக்க ஆரம்ப நாட்களில் எப்படி போரிட்டார்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டார்கள் என்பதைக் கூறும் நூலே தாயகம் நோக்கிய பயணமாகும்.

'லியோன் யூரிசு' எழுதிய 'எக்சோடசு' என்ற நூலின் தமிழாக்கமே ''தாயகம் நோக்கிய பயணம்''. (இதன் விலை 400 ரூபா)

இரண்டு பாகங்களாக 914 பக்கங்களைக் கொண்டு வெளிவந்திருக்கும் இந்நூல் ஈழநாதத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

எகிப்தியர்கள், அசீரியர்கள் உரோமர்களால் விரட்டப்பட்ட யூதர்கள் 100 க்கும் மேற்பட்ட நாடுகளில் சிதறி வாழ்ந்தார்கள்.

தாம் வாழ்ந்த நாடுகளில் தொடர்ச்சியாக சந்தித்த இனப்படுகொலைகள், இன்னல்கள் ,வர்களுக்கு எப்போதும் இழந்த தாயகத்தை நினைவூட்டிய போதிலும் தாம் வாழ்ந்த நாடுகளின் வசதிகளை இழந்து தாயகம்செல்ல இவர்களில் பெரும்பாலோர் தயாராக இருக்கவில்லை.

முதலாம், இரண்டாம்போர் இந்நிலையை மாற்றி அமைத்தது.

இரண்டாம் உலகப்போரில் 60 இலட்சம் யூதர்கள் உலகெங்கும் கொல்லப்பட்டார்கள்.

முதலாம், இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் உருசியாவில் 1884 ஆம் ஆண்டு யூத சேரி ஒன்றில் நடந்த இனப்படுகொலையைத் தொடர்ந்து அதில் கொல்லப்பட்ட சைமசு ரேபின்சுகி என்பவரின் இரு பிள்ளைகளான ஜொசியும், யாக்கோபும் அங்கிருந்து கால்நடையாக 3000 மைல்களை கடந்து மூன்றரை ஆண்டுகளின் பின் இசுரேலை வந்தடைகின்றனர். (அப்போது இப்பகுதி பலத்தீனம் என்று அழைக்கப்பட்டு வந்தது. கி. மு. 1200 ஆம் ஆண்டுகளில் அப் பகுதிகளில் வாழ்ந்த பிலித்தீனியர்கள் அப் பகுதியை பிலித்தீன் என அழைத்தனர். அது பின்பு பலத்தீனம் என மருவியது.)

தேனும் பாலும் வழிந்தோடும் தேசம் என்று கற்பனையோடு தாயகம் நோக்கித் திரும்பும் இவர்கள் காண்பதெல்லாம் வெறுமையான பாலைவனங்களும் அணுக முடியாத சதுப்பு நிலங்களுமேயாகும்.

ஜொசியும், யாக்கோபும் தமது பெயர்களை எபிரேய மொழியில் பராக் பென் கானான், அக்கிவா என மாற்றிக்கொள்கின்றனர்.

தாயக மீட்புக்காக அமைக்கப்பட்ட இரகசிய காப்பு படையமான ககானாவில் முதன்மை உறுப்பினராக பராக் பென் கானான் செயற்படுகின்றார்.

ககானாவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் 'மக்கபீசு' என்ற புதிய போராட்ட அமைப்பை அக்கிவா உருவாக்குகின்றார். இதனால் ஒன்றாக வாழ்ந்த சகோதரர்களிடையே பிரிவு ஏற்படுகின்றது.

இரண்டாம் உலகப் போரை தொடர்ந்து பெருமளவில் யூத மக்கள் தாயகம் திரும்புவதை அன்றைய அரசியல் சூழ்நிலை காரணமாக பிரித்தானியா தடுக்கின்றது.

ஆயிரக்கணக்கில் யூத மக்கள் சைப்பிரசில் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

## அறிவொளி

பிரித்தானியரின் இந்த மனிதநேயமற்ற செயலை உலகறியச் செய்து தடையை உடைக்கும் பல முயற்சிகளில் ஒரு முயற்சியாக 'எக்சோடசு' என்ற கப்பலில் இரகசியமாக 302 யூத குழந்தைகள் ஏற்றப்படுகின்றனர்.

இக்கப்பல் தாயகம் நோக்கிச் செல்ல விடாது விடின் அதில் இருக்கும் குழந்தைகள் உண்ணாமல் இருந்து இறப்பார்கள் எனவும் அதேவேளை கப்பலை கைப்பற்ற முயன்றால் கப்பலில் நிரப்பப்பட்டிருக்கும் வெடிபொருள்கள் வெடிக்கவைக்கப்பட்டு கப்பல் முற்றாகத் தகர்க்கப்படும் எனவும் இந்நடவடிக்கைக்குப் பொறுப்பாக இருக்கும் பராக் பென் கானானின் மகனும் ககானாவின் இன்னொரு இரகசிய அமைப்பான அலியா பொற்றின் உறுப்பினருமான அரி பென்கானான் அறிவிக்கின்றான்.

பிரித்தானிய அரசு கப்பலை செல்ல விடமறுக்கின்றது ஒவ்வொரு நாளும் பத்து குழந்தைகள் கடலில் குதித்து தற்கொலை செய்யும் என அரி பென் கானானின் அறிவிப்பை தொடர்ந்து உலகெங்கும் பிரித்தானிய அரசுக்குப் பெரும் எதிர்ப்பு தோன்றுகிறது.

கப்பல் தாயகம் நோக்கிச் செல்ல விடப்படுகின்றது.

அக்கப்பலில் அரி பென் கானான், திருமதி கத்தறின், பிறமென்ற், கரேன் கிளமென்ற், டொவ் லண்டவ் ஆகியோரும் செல்கின்றனர்.

திருமதிகத்தறின்பிறமென்ற் அமெரிக்காவைச் சேர்ந்த மருத்துவ தாதியாவார். இவரது கணவன் போரிலே இறந்துவிட்டார். ஒரே மகள் நோயினால் இறந்து போனாள். தன் மனக்கவலையை போக்க சிறுவர் சேவைப் பிரிவில் தாதியாகக் கடமையாற்றும் இவர்கரேன்கிளமென்றைசந்தித்தபின் அவள் மேல்கொண்ட அன்பு காரணமாக இசுரேல் செல்கின்றார்.

கரேன்கிளமென்ற் ஜெர்மனியில் பல்கலைக் கழகத்தில் கடமையாற்றும் யூத விரிவுரையாளர் ஒருவரின் மகளாகும். நாசிகளின் இனப்படுகொலையில் இருந்து தப்ப இவள் மட்டும் எட்டாவது வயதில் டென்மார்க்குக்கு அனுப்பி வைக்கப்படுகின்றாள். இரண்டாம் உலகப்போரின் முடிவில் தனது குடும்பத்தில் தந்தையைத் தவிர மற்றையோர் அனைவரும் கொல்லப்பட்டு விட்டதை அறிகிறாள். தந்தையைத் தேடி தாயகம் என சொல்லப்படும் இசுரேல் நோக்கிச் செல்கின்றாள்.

டொவ் லண்டவ், இவன் போலந்து யூத சேரியில் வாழ்ந்த லண்டவ் குடும்பத்தின் இளைய மகன். நாசிகளின் யூத அழிப்பின் போது தாயும் மூத்த சகோதரியும் விசவாயு கூடத்தில் இறக்கின்றனர். மூத்த சகோதரன் மண்டெக்கும் சகோதரி றேபேக்காவும் நாசிகளை சேரிக்குள் நுழைய விடாது தடுக்கும் போரில் கொல்லப்படுகின்றனர். பதினான்கு வயது றேபேக்கா கைக்குண்டினால் எதிரிகளையும் அழித்து தன்னையும் அழித்துக்கொள்கிறாள். அங்கு நாசிகளிடம் பிடிபடும் டொவ்வுக்குயூதர்களை விசவாயு கூடத்திற்கு அனுப்பி விட்டு அவர்கள் இறந்தபின் அவர்களது உடல்களை எரிக்கும் வேலை தரப்படுகின்றது. இதனால் மனநிலை பாதிப்புக்குள்ளாகின்றான். அவனும் தாயகம் நோக்கிச் செலகின்றான்.

இவர்களை முதன்மை நாயகர்களாகக் கொண்டு யூத மக்களின் வாழ்வில் ஏற்பட்ட இழப்புக்கள், சந்தித்த கொடுமைகள், அவர்கள் தாயகம் நோக்கி செல்வதில் ஏற்படும் இடர்பாடுகள், தாயகத்தில் அவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் என்பவற்றை இந்நூல் அழகாகப் படம்பிடித்துக்காட்டுகின்றது.

பலத்தீனம் தென்பகுதியில் ஒரு பெறுமதியும்இல்லாத வனாந்தரமாகவும், நடுவில் அரிக்கப்பட்டும்,வடக்கில் சதுப்புநிலமாகவும் இருக்கின்றது. அது துர்நாற்றம் மிகுந்த இடமாகவும், சூரியனால்காய்ச்சப்பட்டுக் கொண்டிருக்கும் இடமாகவும் ஐந்து கோடி பரம விரோதிகளுககு நடுவே இருக்கின்றது. அப்படி இருந்தும் யூத மக்கள் தலைகீழாக நின்று எப்படியும் அங்கு போய்ச்சேர வேண்டும் எனப் போய்ச் சேர்கின்றார்கள்.

நாற்பதாயிரம்ஆண்டுகளாக எந்த உயிரினத்தையும் உற்பத்தி செய்யாமல் இருந்த காரச் செறிவு கூடிய நிலங்களை உற்பத்தி செய்ய வைக்கின்றனர்.

சதுப்பு நிலங்களில் கைகளினாலேயேவடிகால்களை அமைத்து நிலங்கலை மீட்டெடுக்கின்றனர்.

( 8 ஆம் பக்கம் பார்க்க )

★ ★ ★

## காலமழையிற் கரையாத காற்சுவடுகள்

பூபதி அம்மா!
உன் பாதச் சுவடுகள்;
கால மழையில் கரையாது.
தினமும் பூக்கும் சிவப்பு மலர்கள்,
உன்முகம் காட்டியே முறுவலிக்கும்.
தாயே! நீ தவமிருந்தாயே,
அந்தக் ''குருந்தமரம்'',
அது வேர்பரப்பும் வேளையெல்லாம்;
இந்த மண் கூர்பிடிக்கும்.
குனிந்த தலை நிமிர்த்திக் கூத்திடும்.
அம்மா! நீ பேச்சிழந்து போனது,
உண்மைதான்.
ஆனால்......
மூச்சிழந்து போய்விட்டதாக,
முற்றுப் புள்ளியிட முடியாது.
எங்கள் மூக்குக்குள் நுளையும் காற்று,
வெறும் காற்றல்ல.. உன் மூச்சுத்தான்.
அடிக்கடி புயலடிக்கும் மண்ணில்தான்,
''பூபதிப்புயல்'' மையம் கொண்டது.
புயல் புறப்பட்டதும்,
''புழுதிமேகம்'' சுருதியடங்கியது.
அன்னியர் பாதங்கள்,
எங்கள் நெஞ்சை மிதித்த போது,
அன்னை கண்களைத் திறந்தாள்.
எங்கள் நெஞ்செரிந்த நெருப்பில்,
பாரதம் குளிர்காய எண்ணியது.
அரிசிப்பொரியோடு அணிவகுப்பு ஆரம்பமானது.
தங்கள் முகத்திரையை கிழிக்க,
இங்கே பூபதித்தாய் இருந்ததை,
அவர்களின் புலனாய்வுக் கமராக்கள்,
புகைப்படம் எடுக்கத் தவறி விட்டன.
வீரத்துக்கு எங்கள் மண்ணில்,
வித்தியாசங்கள் கிடையாது,
ஆணுக்கும், பெண்ணுக்கும் பேதங்கள் இல்லை.
குஞ்சென்றும், மூப்பென்றும் எல்லைகள் இல்லை.
இங்கு எல்லாமே போரிடும்,
பூபதி அம்மாவின் கால்பட்டமண்,
எப்படிக் கைகட்டி நிற்கும்?
தேரோடும் வீதியெல்லாம்,
எதிரிக்கு எதிராகப் போராடும் வீதிகளாயின,

பட்டினி வில்லெடுத்த ''பார்த்திபன்'',
நல்லூரில் நாணேற்றினான்.
''என்மரணம் பலருக்கு ஜனனம்'' என்றான்.
எங்கே அந்த விடுதலைக் குழந்தைகள்?
தமிழீழம் பார்க்கத் துடித்தது.
கட்டித் தழுவக் காத்திருந்தது.
பாரதம்மீண்டும் ''குருசேத்திரத்தைக்'' கண்டது.
எங்கள் மண் குருதிச் சேத்திரமானது.
எழுவான் திசையில் ஒரு ஒளிப்பிழம்பு.
இந்தா எழும்புகிறேன் என்று,
திசைகள் சிவக்க சிலிர்த் தெழுந்தது.
''அன்னை பூபதி''
விஸ்வருபமாக விண்தொட நிமிர்ந்தாள்.
தேசமே எரியும் போது எப்படித் தென்றல் வீசும்.
குருந்தமர நிழல்,
அவளுக்குக் குளிரவில்லை.
எரிமலை முகட்டின் பெருவாய் திறந்து,
அக்கினிக்குழம்பு ஆறாய்ப் பாய்ந்தது.
சப்பை மூக்குகளும்,
தலைப்பாகைத் தலைகளும்,
அடிமுடி காண முடியாது நின்றன.
ஏவிவிட்ட சூனியக் காரர்கள்,
என்னசெய்வது என்று திகைத்தனர்.
பாரதத்தின்
விரல்களெல்லாம் விஷம்
இதழ்களில் மட்டும் இனிப்பு
இதைப் புலிகள் மட்டுமே புரிந்து கொண்டனர்.
தேசம் தெரிந்து கொள்ள சிறிது நாளாச்சு.
தெரிந்தபோது
பூபதி அம்மா போருக்குப் புறப்பட்டாள்.
நெஞ்சுக் கவசம்
வெள்ளைக்குதிரை பூட்டிய தேர்
கைந்நிறைய அஸ்திரங்கள்
எதுவுமின்றி.
நெஞ்சில் எரிந்த சத்திய நெருப்புடன்
நேர்வந்தாள்.
வென்றாள்.
''ஆவடி'' ஆயுதங்களால்
நாவலடிக் கல்லறையைக் கூட
சல்லடை யாக்க முடியவில்லை
எப்படி இயலும்
அது கல்லாலும் மண்ணாலுமா கட்டப்பட்டது?
இல்லையே
எங்கள் வீரத்தாலும், குருதியாலுமல்லவா
உறுதியாக்கப்பட்டது.

- புதுவை இரத்தினதுரை -

# நீங்களும் தமிழன்தானா? ஒரு சிங்களவரின் கேள்வி

''அந்த நேரம் கள்ள வாக்குகளைப் போடுவதற்காக நாம் யாழ்ப்பாணம் போயிருந்தோம் என்பது உண்மை. ஆனால் நானோ, சிறில் மத்தியூவோ, காமினியோ அல்லது பெஸ்ரஸ் பெரேராவோ நூல் நிலைய எரிப்பில் சம்பந்தப்படவில்லை. அதைச் செய்தது ஹெக்டர் குணவர்த்தனா என்கின்ற பொலீஸ் அதிகாரிதான்...''

''அவர்தான் அதற்கு முழுப் பொறுப்பாளி. ஆனால் அதை எம்மால் தடுக்க முடியவில்லை என்பது உண்மை. அதை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம்....

''1983 கலவரத்திற்கு நானும் பங்களிப்பு செய்திருக்கிறேன். நானும் சிறில் மத்தியூவும் மட்டுமல்ல, அரசோடு இருந்த எல்லா மூத்த அரசியல்வாதிகளும் அக்கலவரத்தை பாவித்தார்கள். தமக்கு தேவையானதை செய்து கொண்டார்கள். சிறில் மத்தியூ, பிரேமதாஸ, காமினி, லலித் போன்ற அனைவரும் அந்த நேரகாலத்தை பாவித்து தமக்கு தேவையானவற்றை செயற்படுத்திக் கொண்டார்கள்....''

''ஆனால் இது இவ்வளவுசிக்கலைகொண்டு வரும் என நாம் எவரும் யோசிக்கவில்லை. ஏனைய காலங்களைப்போன்று ஒரு சாதரணமான கலவரமாக எழும்பி அடங்கி விடும் என்றே கருதியிருந்தோம்...''

மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்தவர் கொழும்பு மாநகர பிரதி மேயர் கணேசலிங்கம்.

இருவருடங்களுக்கு முன் கொழும்பில் வெளிநாட்டு தூதுவர் ஒருவரின் வீட்டில் நடந்த இரவு விருந்தொன்றில் பேசிக் கொண்டிருக்கையில் ராவய ஆசிரியர் விக்டர் ஐவனிடம் கணேசலிங்கம் இவ்வாறு தெரிவித்ததாக ஐவன் அவர்களே ஒரு பத்திரிகைப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

ஐவன் இது குறித்து மேலும் தெரிவிக்கையில் கணேசலிங்கம் கூறியதைக் கேட்டுத்தான் ஆத்திரமடைந்து ''இப்படியான கேவலமான செயலைச் செய்ய தமிழனான நீங்கள் எவ்வாறு உடந்தையாக இருந்தீர்கள்'' என்று தான் கேட்ட தாகவும் தெரிவித்துள்ளார்.

---

## றோ

ஆனால் குணரட்ண புலிகள் பற்றிய ரகசியங்களை ஊகங்கள், கற்பனைகள், வதந்திகள் கலக்காமல் சொல்லும் முயற்சியில் பெரும்பாலும் வெற்றிபெறவில்லை என்பதே இங்கு முக்கியம்.

அவருக்குக் கிடைத்த புலனாய்வுத்துறை அறிக்கைகள், மற்றும் ராணுவத் தளபதிகள் புலிகளுக்கு எதிரான இயக்கங்கள் தந்த தகவல்கள் போன்ற எவையும் அவர் புலிகளின் எழுச்சியைச் சரியானபடி அடையாளங் காண உதவவில்லை. இது அவருக்கு மட்டும் உரிய பிரச்சினையுமல்ல. அவரைப்போன்ற சிங்களஎழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், புத்திஜீவிகள், அரசியல்வாதிகள் சகலருக்குமான ஒரு பிரச்சினை. புலிகளுக்கும் தமிழ்த் தேசியத்துக்குமான புதிரான நூதன இணைப்பை அவர்களால் எப்பொழுதுமே புரிந்து கொள்ள முடிந்ததில்லை.

புலிகள் பற்றிய ரகசியங்களைப் பெறுவதற்கு அவர்கள் இந்திய - இலங்கை புலனாய்வுத்துறைகளையோ, அல்லது ராணுவத்தளபதிகள் போன்றோரின் தனிப்பட்ட கூற்றுக்களையோதான் நம்பியிருக்கிறார்கள். முதலாவது ஈழப் போரின் முடிவிலிருந்து புலிகளுக்கு எதிரான இயக்கங்கள் இது விசயத்தில் அவர்களுக்கு உதவலாயின. எனினும் மேற்படி இயக்கங்களின் கணிப்பீடுகளும் ஒரு கட்டத்திற்கு மேல் பிசகின. ஏனெனில் புலிகள் தொடர்பான சரியான மதிப்பீடு மேற்படி இயக்கங்களிடம் இருந்திருந்தால் அவர்களை புலிகள் இவ்வளவு சுலபமாக களத்திலிருந்து அகற்றியிருக்க முடியாது.

இவ்விதம் புலிகளைப் பற்றிய சரியான மதிப்பீடுகளிற்கு வரமுடியாமல் முற்கற்பிதங்களோடும், ஊகங்கள், வதந்திகளோடும் காணப்பட்ட பெரும்பாலான சிங்களவர்களிற்கு ஐ. பி. கே. எவ். விலகிக் சென்று கொண்டிருந்த நாட்களில் ''சண்டே ஐலண்ட்'' இல் ஒரு ''தராகி'' கிடைத்தார்.

தராகியின் இயற்பெயர்: டி. பி. சிவராம் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் புளொட் இயக்கத்தின் சிந்தனாவாதிகளில் ஒருவராயிருந்தவர். போராட்டத்தில் நேரடியாக ஈடுபட்டவர் என்பதாலும் முக்கியமான ஒரு காலகட்டத்தில் இந்தியாவில் நின்றவர் என்பதாலும் தராகி சிங்களவர்களிற்கு நிறையப் புதினங்களைச் சொன்னார். ஆனால் அவரைப் பற்றித் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள், அவரிற்கும் யுத்த களத்திற்குமான நேரடித் தொடர்புகள் அற்றுப்போய் கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டன என்று. தராகி இப்பொழுது யாழ்ப்பாணத்திலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் வரும் புலிகளின் வெளியீடுகளிலிருந்து பெறும் தகவல்களில்தான் பெரிதும் தங்கியிருக்கிறார். அவருடைய பத்திகளைப் பற்றி யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு விமர்சகர் பின்வருமாறு சொன்னார்: ''தராகி சிங்களவர்களைப்பயமுறுத்துகிறார்.''

றோகான் குணரட்ணவின் நூலை தராகி சண்டே ஐலண்ட் இல் விமர்சித்திருந்தார். அதில் ஓரிடத்தில் அவர் தனக்குள்ள வரையறைகளை நேர்மையாக ஒப்புக்கொள்கிறார். அவர்கூறுகிறார்: ''புலிகள் எவ்விதம் இந்தியப் புலனாய்வுத் துறையைத் திட்டமிட்டும் பிரக்ஞையோடும் தங்களிற்கேற்றாற் போல பயன்படுத்தி உலகின் பலம் மிக்க ராணுவ இயக்கங்களில் ஒன்றாக உருவானார்கள் என்பது புலிகளின் மூத்த தலைவர்கள் கதைக்கத் தீர்மானித்தால் மட்டுமே எழுதப்பட முடியும்.''

மேவின் டி சில்வா தராகியை தமிழர் விவகாரங்களில் மிகவும் விசயந்தெரிந்த ஒரு பத்திரிகையாளர் என்று கூறுகிறார். ஆனால் தராகியோ இங்கு தனக்குத் தெரியாத ரகசியங்களைப் பற்றிக் கூறுகிறார்.

புலிகளின் சயனைற், அவர்களின் வீரத்தையும் ஓர்மத்தையும் மட்டும் குறித்து நிற்கவில்லை. அது அவர்களைத் தொடர்ந்தும் உலகத்தின் பார்வைக்கு ரகசியமான ஒரு புதிராகவே வைத்திருக்கிறது.


யாழ்.
பல்கலைக்கழக
வெளியீடு

வெளி வந்து விட்டது

பண்டிதமணியின்
**பேரும்
புகழும்**

பேராசிரியர்
சு. சுசிந்திரராசா
எழுதியது

விலை ரூபா. 90.00

தேவையானோர்
நிர்வாகக் கிளை
உதவிப்பதிவாளருடன்
தொடர்பு கொள்க.

பதிவாளர்

யாழ்.பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
1993.03.23

[சி/6258]


---

## தாயகம்

பெரிய அளவில் துப்பாக்கிகள் இல்லாமல், பதவிகள் சீருடைகள் இல்லாமல், சம்பளம் இல்லாமல் 25 வயதுக்குட்பட்ட ஆண்களையும் பெண்களையும் கொண்டிருந்த யூதர்களின் படையம் மிகப் பெரிய தற்கொடைகள் மூலம் தம் தாயகத்தைக் காக்க போராட்டம் நடாத்துகின்றது.

பிரித்தானியா, அமெரிக்கா, பிரான்சு, அரபு நாடுகள் இவற்றிற்கு இடையே உள்ள பூகோள நலன்களை, முரண்பாடுகளை தம் தாயகத்தை வென்றெடுப்பதற்காகப் புத்திக் கூர்மையுடன் பயன்படுத்துகின்றனர்.

ஐந்து கோடி அரபுகளுக்கு எதிராக ஐந்து இலட்சம் யூத மக்கள். பலத்தீனத்தின் அகலமோ 50 மைல்களே. தாம் பாடுபட்டு உருவாக்கிய எல்லாம் தம்மிடமிருந்து பறிக்கப் படுமே என்ற எண்ணம், அவர்களுடைய மண் அவர்களுடன் இருபத்தினாலு மணி நேரமும் பின்னிப் பிணைந்திருக்கின்றது. அவர்களின் வாழ்க்கையின் அச்சாணியும் இருப்பின் அர்த்தமும் அதுதான்.

''அமைதி என்பது அறிந்து கொள்ளமுடியாத வார்த்தை. ஒரு மாயை அமைதி எப்படி இருக்கும் என எண்ணிப்பார்க்கின்றோம்'' எனக் கூறும் அவர்கள் தமது எதிர்கால தலை முறையின் வாழ்வுக்காக போராடும் வீர வரலாற்றை தாயகம் நோக்கிய பயணம் எடுத்துக் கூறுகின்றது.

யூதர்களுக்கு சார்பாக இந்நூல் எழுதப்பட்டபோதிலும் வரலாற்றுப் படிப்பினைகளை கற்றுக் கொள்ள கட்டாயம் படிக்க வேண்டிய சிறந்த நூலாகும்.

---

## சமையல் குறிப்பு

### குரக்கன் தோசை

தேவையான பொருள்கள்:

1 குரக்கன் மா 4 சுண்டு
2. உளுத்தம் பருப்பு 1 சுண்டு
3. உப்பு அளவாக
4. வெண்காயம் சிறிதளவு
5, செத்தல் மிளகாய் சிறிதளவு
6. பெரும் சீரகம் சிறிதளவு

செய்முறை:-

குரக்கன் மாவை அளவாக நீர் விட்டு கெட்டியாக முதல் நாள் இரவு பிசைந்து வைக்கவும். உழுத்தம் பருப்பை மறுநாள் காலை ஊற வைத்து 3 மணித்தியாலம் ஊறியதும் தோசைக்கு அரைப்பது போல் அரைத்து பிசைந்த குரக்கன் மாவுடன் கரைத்து வைக்கவும். 4 மணித்தியாலம் சென்ற பின் வெண்காயம், செத்தல்மிளகாய் பெருஞ்சீரகத்தை தாளித்து அளவாக உப்புப் போட்டு தோசைக்கல்லில் நன்றாக நல்லெண்ணெய் பூசி தோசையாக சுட்டு எடுக்கவும். இது உண்பதற்கு மிகவும் சுவையாகவும் மென்மையாசவும் இருக்கும்.

---

## 100ஆவது நாள் நினைவலைகள்



**மேஜர் ரூபால்**

(சிவசுப்பிரமணியம் சிவகுமார்)

அன்னையின் மடியில்:
1967 - 08 - 21

ஆழியின் வீர அடியில்:
1992 - 12 - 16

தாண்டுபோன தமிழன் தன் உரிமையை
மீண்டெடுக்க திருமலையிலிருந்து வந்தீரே!
சுதந்திர அதிகாலை யொன்றிற்காக - சுற்றியிருந்த
அன்னையை அணைத்தவர்களை விட்டுச் சென்றீரே!
ஆசையில் உயர்ந்ததும் அழியாதிருப்பதும்
மண்மீட்பாசை யொன்றேயென்று நாட்குறிப்பில் எழுதினீரே
தொட்டபேனா சுதந்திரமாக வரையும் சுதந்திரச் சிற்பி யென்பதால்
சுசி என்று செல்லமாக அழைக்க வைத்தீரே!
உள்ளத்தில் குழந்தையாய் பேச்சில் மழலையாய் - ஆனால்
கொள்கையிலும் செயலிலும் உறுதியாய் நிற்பீரே!
அன்புப் பெற்றோரை அநேக காலமாகப் பார்க்காமல்
அல்பத்தில் நிழற்படத்தைப் பார்த்து ஆசியுடன் சென்றீரே!
பூப்போன்ற மென்மையும் பால்போன்ற கருணையு மென்பதால்
பூபால் எனப் பெயர் பெற்றாயோ!
மலை குலைந்தாலும் மண்மீட்புப் பாசம் குலையா தென்பாய் - சிவா
நிலை குலைந்து நிம்மதி இழந்து தவிக்கின்றோம்.

1993 - 03 - 25 உன் அன்புச் சகோதரர்கள்

(4555)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

| வீர ஜனனம் | வீரச் சாவு |
| --- | --- |
| 4 | 19 |
| — | — |
| 09 | 3 |
| — | — |
| 1971 | 1991 |



**வீரவேங்கை நளினி**

(சின்னத்தம்பி புவனேஸ்வரி)

திதி: 26-03-93


சிலாவத்தை அடிபாட்டில் சிட்டாய் பறந்தவளே
ஆண்டு இரண்டு மறைந்தாலும் நின் அன்பு முகம்
நம் அகத்தினில் அழிக்க முடியவில்லையம்மா!
மண்காக்க மலர்ந்த மலரே உன்கனவு நனவாகும்.

நகுலன் வீதி, - குடும்பத்தினர்
மீசாலை வடக்கு.

(சி-6266

# றோ நடத்திய யுத்தம்!

**நிலாந்தன்**




ஓர் அரசன் தனக்கு அயலிலுள்ள பலவானான எதிரியை விட பலமான மற்றொருஅரசனோடுகூட்டு வைத்துக் கொள்ளலாம். அப்படியொரு பலமான அரசன் இல்லையென்றால்அயலவனான எதிரியுடன் ஒத்துப் போகவேண்டும் நிதி வழங்கல்கள் மூலமோ,படை வழங்கல்கள் மூலமோ அல்லது தனது நிலத்தின் ஒரு பகுதியை விட்டுக் கொடுப்பதன் மூலமோ, மேற்படி அயலவனைத்தவிர்த்துவிடல் வேண்டும். பலவானான ஒரு எதிரியால் தாக்கப் படக்கூடியவிடத்து, அவனோடு உறவு வைத்திருப்பது என்பது தாக்கப்படுவதைவிடத் தீங்கானது அல்ல.

கௌடில்யர் – அர்த்த சாஸ்திரம்

❋ ❋

இது ஒற்றர்களின் காலம்.

எல்லா இடங்களிலும் எப்பொழுதும் எம்மை உற்றுக் கவனிப்பவை ஒற்றர்களின் விழிகள்.

எல்லா இடங்களிலும் எப்பொழுதும் எம்மை உற்றுக் கேட்கின்றவை ஒற்றர்களின் செவிகள்.

இன்று யாழ்ப்பாணத்தில் மக்கள் கூடுமிடங்களில் ஒற்றர்களைப் பற்றிய எச்சரிக்கைகளைக் காணமுடிகின்றது.

நவீன அரசியலில் ஒரு அரசின் மிகத்துடிப்பான விழிப்பான ஒரு பாகம் ஒற்றர்கள் படைதான்.

மிக ஆதியான காலமிருந்தே அரசுகளின் உருவாக்கத்தோடு ஒற்றர் படையின் வளர்ச்சியும் சேர்த்தே அடையாளம்காணப் படுகிறது. கிறிஸ்துவுக்கு மூன் நாலாம் நூற்றாண்டில் இந்தியாவில் தோன்றிய அர்த்த சாஸ்திரம் ஒற்றர்களைப்பற்றி வகை பிரித்தும், வற்புறுத்தியும் கூறுகிறது.

நவீன அரசியலில் ஒற்றர் படை அல்லது உளவு நிறுவனம் எனப்படுவது தவிர்க்க முடியாதபடி நிழல்அரசுதான்.

நவீன வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏதோ ஒன்று நாடுகளின் பலத்தைத் தீர்மானிப்பதாக இருந்தது. ஒரு காலத்தில் பலமான கடற்படையை வைத்திருந்த நாடு பிறநாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்தியது. பின்பு கொலனிகளை வைத்திருந்த அரசு பேரரசுஆகியது. பின்னர் விமானப்படை வந்தது. அதற்கடுத்ததாக ஏவுகணைகள், இன்று அணுவாயுதங்கள்.

நவீன அரசியலில் கோட்பாடுகள் மாறின. மூலோபாயங்கள் மாறின. ஆயுதங்கள் மாறின. தொழில் நுட்ப வளர்ச்சியோடு சேர்ந்து படிப் படிப்படியாக ஆயுதங்களின் கொல்லுந்தூரம் கூடியது. கொல்லுந் திறனும் கூடியது. ஆனால் மிக ஆரம்பத்திலிருந்து இன்றுவரை மாறாத அதே முதன்மை நிலையிலிருப்பவை உளவு நிறுவனங்கள் மட்டும் தான்.

கடந்த தசாப்தத்தில் முடிவுக்குவந்த கெடுபிடியுத்தம்கூட ஒரு விதத்தில் இரண்டு உளவு நிறுவனங்களிற்குஇடையில்(சி.ஐ.ஏ—கே.ஜி.பி)நடந்த யுத்தம் தான்.

இன்று வலிமையான உளவு நிறுவனத்தை வைத்திருக்கும் நாடு எளிதில் வெல்லப்பட முடியாத நாடாயிருக்கிறது.

இந்த வகையில் தென்னாசியாவில் அதிகம் சர்ச்சைக்கும் பிரபல்யத்துக்கும் உள்ளாகிய ஓர் உளவு நிறுவனம் 'றோ'. இந்தியப் பேரரசின் நிழல் அரசு அதுதான். றோ.

இந்தியாவுக்கு உளவு நிறுவனம் குறித்து, ஒற்றர் படை குறித்து நீண்ட பாரம்பரியமும் தொடர்ச்சியான அனுபவங்களும், தேர்ச்சியும் உண்டு. முதல் இந்தியப் பேரரசான மகதப் பேரரசை அசோகன் அமைப்பதற்கேதுவான முன்னோடிச் சிந்தனைகளில் முக்கியமானது கௌடில்யர் எழுதிய அர்த்த சாஸ்திரம் என்று விமர்சகர்கள் கூறுகிறார்கள். அர்த்த சாஸ்திரம் கூறும் அரசு ஒரு விதத்தில் ஒற்றர்களின் அரசுதான். அர்த்த சாஸ்திரத்திலிருந்து றோ வரையிலுமான நீண்ட தொடர்ச்சியறாத கூர்ப்பின் பின்னணியில் வைத்தே இந்தியப் புலனாய்வுத்துறையின் வளர்ச்சியை, வலிமையைப் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்தியப்பேரரசு தன் அயலவர்களின் சுதந்திரத்தை தனது பாதுகாப்பை விடவும் மேலானதாக என்றுமே கருதியதில்லை. இந்த வகையில் இந்து மகா கடலில் இந்தியப் பேரரசின் கீழேயிருப்பதான 'துர்ப்பாக்கிய' அமைவிடம் காரணமாக இலங்கைத்தீவு எப்பொழுதுமே சுதந்திரமாக இருந்ததுமில்லை.

றோ, பாகிஸ்தானை துண்டாடி பங்களாதேஷை உருவாக்கியது. இன்றும் பாகிஸ்தானின் சிந்துமாகாணத்தில் உள்ள தீவிரவாதிகளுக்கு றோ உதவி வருகிறது. பங்களாதேஷில் சாந்திபாகினி கெரில்லாக்களுக்கு றோ இன்றும் உதவுகிறது. சிக்கிம் மன்னர் ஓர் அமெரிக்கப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டதும், சி.ஐ.ஏ. மன்னரின் மனைவியூடாக சிக்கிம்இல் ஊடுருவுகிறது என்று பயந்த இந்திராகாந்தி சிக்கிம்இன் ஸ்திரத் தன்மையைக் குழப்பும்படி றோவிற்குக் கட்டளையிட்டார். நேபாளத்தில் இந்தியாவுக்கு அடங்காதமன்னரை, றோ மன்னரின் எதிரிகளை வளர்த்ததின் மூலம் இறுதியாக அடக்கியது.

இப்படியாக இந்தியப் பேரரசின் வல்லரசு வியூகத்தை றோதான் வடிவமைத்தது. செயற்படுத்தியது.

ஆனால் எல்லாக் களங்களிலும் வெற்றியும், புகழும் ஈட்டிய றோவின் வியூகங்கள் இலங்கைத்தீவில் தோல்வியில் முடிவடைந்தன. ஐ. பி. கே. எவ். தளபதி கல்கட் போன்ற அவர்களின் சொந்தத் தளபதிகளே தோல்விகளுக்காக றோவைக் குறைகூறும் நிலை இங்கு உண்டாகியது.

இவ்விதம், றோ தோற்ற படலத்தை அதன் ஆரம்பத்திலிருந்து கூற முற்படுகிறது. றோகான் குணரட்ண எழுதிய சிறிலங்காவில் இந்தியத் தலையீடு (Indian Intevention in Sri Lanka) என்ற நூல் இவ்வாண்டின் ஆரம்பத்தில் கொழும்பில் வெளியிடப்பட்ட இந்நூலின் விலை: 595 ரூபாய். பக்கங்கள்: 499

றோகான் குணரட்ண கூறுகிறார்: 1968 இல் இந்திரா காந்தியின் ஆலோசனைப்படி ஆர். என். காஓ (R.N.KAO) றோவை ஸ்தாபித்தார். இந்திராகாந்தி கொல்லப்படும் வரை காஓ அவருடைய தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்தார்.

இந்திரா காந்தியின் காலத்திலிருந்து இந்திய வெளியுறவுக் கொள்கையை றோதான் வடிவமைத்தது. அதைப் பின்னர் வெளியுறவு அமைச்சு நடைமுறைப் படுத்தியது. இந்திய வெளியுறவுக் கொள்கையை வகுப்பதில் பல்வேறு அமைச்சுக்களும் நிறுவனங்களும் சம்பந்தப்பட்டன. எனினும் றோதான் 'Real Player' ஆக இருந்தது.

பங்களாதேஷ் பிரிக்கப்பட்ட பின்னர் அதன் பிரதமர் ஜியா உர் ரஃமான் புதுடில்லி வந்திருந்தார். அங்கு இந்திராகாந்தியைச் சந்தித்த அவர் அச்சந்தர்ப்பத்தில் அங்கு காணப்பட்ட காஓ ஐ சுட்டிக்காட்டி கூறினார்: ''எனது நாட்டைப் பற்றி நான் அறிந்து வைத்திருப்பதை விடவும் இந்த மனிதர் அதிகம் அறிந்து வைத்திருக்கிறார்''.

பங்களாதேஷில் இந்தியா எதைச் செய்ததோ, அதைத்தான் சிறிது மாற்றங்களுடன் சிறிலங்காவிற்குள்ளும் செய்ய முற்பட்டது என்று குணரட்ண கூறுகிறார். பங்களாதேஷில் இந்தியத் தலையீடு இரண்டு கட்டங்களையுடையது. முதற் கட்டம் றோவிற்குரியது. இதற்குப் பொறுப்பு காஓ. றோ பாகிஸ்தானுக்கு எதிரான வங்காளிப் போராளிகளை ஊக்குவித்து உதவியது. இதன் மூலம் ஆத்திரமூட்டப்பட்ட பாகிஸ்தான் இந்தியா மீது போர்ப் பிரகடனம் செய்தது. இதை றோ முன்கூட்டியே எதிர்பார்த்தது. இரண்டாம் கட்டம் படையெடுப்பு. இதற்குப் பொறுப்பு ஜெனரல் மனெக்ஷோ. பாகிஸ்தானின் போர்ப் பிரகடனத்தை எதிர்பார்த்திருந்த இந்தியப்படைகள் கிழக்குப்பாகிஸ்தானை— பங்களாதேஷை — ஆக்கிரமித்தன. பன்னிரண்டு நாட்கள் யுத்தத்தின் பின் டாக்கா இந்தியர்களிடம் வீழ்ச்சியடைந்தது.

இந்த இரண்டு கட்டங்களின் போதும் காஓ, மனெக்ஷோ இருவரும் இந்திராகாந்தியிடமிருந்து நேரடியாக உத்தரவுகளைப் பெற்றார்கள். அவர்கள் இந்திராகாந்திக்கு மட்டும்தான் பதில் சொல்ல வேண்டியிருந்தது.

சிறிலங்காவில் பங்களாதேஷ் போலவே முதலாம் கட்டம் அமைந்தது. இங்கு முகங்கள் மட்டும் மாறின. இந்திராகாந்தி கொல்லப்படும் வரை தமிழ் இயக்கங்களிற்கு பயிற்சியும் பிற வசதிகளும் தரும் நடவடிக்கைகளை காஓ கவனித்து வந்தார். அதன் பின் கிரிஷ் சந்ர சக்சேனா, வெர்மா, ஜோஷி போன்ற றோவின் முக்கிய இயக்குனர்கள் சகலரும் ஈழப்போரில் சம்பந்தப்பட்டார்கள்

இரண்டாம் கட்டம் சிறிலங்காவில் சிறிது வித்தியாசப்பட்டது. பங்களாதேஷில் இந்தியப்படைகள்ஆக்கிரமித்தன. சிறிலங்காவில் இந்தியப்படைகள் அழைக்கப்பட்டன. ஜே. ஆர். இந்தியப்படைகளை ஐ. பி. கே. எவ். என்ற பெயரில் இங்கு அழைத்தார். ஆனால் பங்களாதேஷைப் போலல்லாது சிறிலங்காவில் றோவின் வியூகங்கள் தோல்விகளும் அழிவுகளுமாய் முடிந்தன......

றோகான் குணரட்ண, றோ அதிகாரிகளை ''செய்திகளைத் திரிக்கும் நிபுணர்கள்'' (Dis information Specialist) என்று அழைக்கிறார். இவர்கள் திட்டமிட்டுக் கொடுத்த ''மிகைப்படுத்தப்பட்ட பிழையான தகவல்களும்'', ''வதந்திகளையொத்த'' தகவல்களும் சிறிலங்கா பற்றி இந்தியாவிடம்காணப்பட்ட ''ஆதாரமற்ற பயங்களை'' மேலும் அதிகரிக்கச் செய்தன. எனவே இந்திரா காந்தி தமிழ் இயக்கங்களிற்கு மறைவாக உதவும்படி றோவிடம் சொன்னார்.... என்று குணரட்ண எழுதிச் செல்கிறார்.

றோ. புலிகளைப் பற்றி பிழையாக மதிப்பிட்டது. புலிகளின் ஆயுத சக்தி பற்றிய அவர்களின் கணிப்பீடுகள் அநேகமாகப் பிசகின. அவர்கள் கொடுத்த ஆயுதங்களை விட அதிகதொகை ஆயுதங்களை அவர்களுக்குத் தெரியாமலேயே புலிகள் வழங்கியிருந்தார்கள் என்பது பின்னரே தெரிய வந்தது. புலிகள் நகர்ப்புறக் கெரில்லாக்கள் மட்டுமே என்று றோ சொன்னது. காடுகளில் புலிகளால் சிறப்பாகப் போரிட முடியாது என்றும் றோ, ஐ. பி. கே. எவ். இடம் சொன்னது. புலிகளும் பிரேமதாசாவும் பேசத்தொடங்கியபோது இந்த இணக்கம் சில மாதங்கள் மட்டுமே நீடிக்கும் என்று றோ, ரஜீவிடம் சொன்னது .. றோ புலிகளை Aயிலிருந்து Z வரை பிழையாகவே மதிப்பிட்டது. றோ புலிகளை சரியாக மதிப்பிடத்தவறிய ஒவ்வொரு கட்டத்திலும் புலிகள் றோவின் பிடியிலிருந்து விலகி விலகிச் சென்றார்கள். ஒரு கட்டத்தில்றோவை மீறி புலிகள் தனியொரு வலிமை மிக்க இயக்கமாக எழுச்சி பெற்றார்கள்.

றோகான் குணரட்ண, றோ, தமிழ் இயக்கங்களை எவ்விதம் கையாண்டது என்பதை நுட்ப விபரங்களுடன் எழுதிச் செல்கிறார். அவரது முன்னைய நூல்களைப் போலவே (War and Peace in Sri Lanka 1987 Sri Lanka: A Lost Revolution? 1990) இந்நூலும் சிங்களவர்களின் விடுப்பார்வத்தைத் தூண்டுகிறது. தமிழ் இயக்கங்களிற்கு றோ ஒழுங்கு செய்த பயிற்சித்தளங்கள் பற்றிய விபரங்கள், புகைப்படங்கள் குறிப்பாக புளொட் டின் முன்னாள் தலைவர் உமாமகேஸ்வரன் மொறிஷியஸ் பிரதமருடன் காணப்படும் புகைப்படம் போன்றன சிங்களவர்களைப் பொறுத்தவரை புதினமானவை குணரட்ண. அரச புலனாய்வுத் துறைஅறிக்கைகளை ரகசியமான விதங்களில் பெறுமளவிற்கும் ஈழப்போரில் சம்மந்தப்பட்ட அனேகமான முக்கிஸ்தர்களைநேர்காணும் அளவிற்கும் 'செல்வாக்கு' மிக்கவராகக் காணப்படுகிறார். ஜே. ஆர். அரசிற்கு அவர் மிக நெருக்கமானவர். ஒரு யு.என். பி. அனுதாபி. அவருடைய முன்னைய நூல்களைப் போல இந்நூலும் அரசுக்குச் சார்பான ஊகங்கள், கற்பனைகள் அசட்டுத்தனமான வதந்திகள் போன்றவற்றின் மீது எழுதப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் விரிவாக விமர்சிப்பது இப்பத்தியின் நோக்கமன்று.

றோ தமிழ் இயக்கங்களை எப்படியெப்படி கையாண்டது என்பதை எழுத முடிந்த குணரட்ணவால், புலிகள் றோவின் வியூகங்களை உடைத்துக் கொண்டு எழுச்சி பெற்றதை விபரங்களோடு வெளிக்கொணர முடியவில்லை.

உளவு நிறுவனங்களைப் பற்றி எழுதுவது என்றாலே நிச்சயமாக ரகசியங்களைப் பற்றி எழுதுவது தான்.

[ 8 ஆம் பக்கம் பார்க்க ]

## அழுகல் குருதி

போசாக்குள்ள உணவு (சமவிகித உணவு) உட்கொள்வதன்மூலமும் ஏதாவது நோயோ அன்றி நோய்க்குரிய அறிகுறியோ தென்பட்டால் உடனே வைத்தியசாலைக்குச் சென்று வைத்திய ஆலோசனையும், சிகிச்சையும் பெறுவதன்மூலம் எமது வதிவிடச் சூழலில் அதிகளவில் கிடைப்பதும் செலவு குறைந்ததும் அல்லது அற்றதுமான இலைக்கறிவகைகளை (கீரை, வல்லாரை பசளி, பொன்னாங்காணி முருங்கை, அகத்தி, சண்டி, முசுட்டை, குறிஞ்சா) போன்ற இலைக்கறிவகையில் ஒன்று தினமும் அதிகளவில் உணவில் சேர்ப்பதன்மூலம் (பச்சையாக சமைப்பதே சிறந்தது) அதிக புரத உணவு (பயறுவகை, பருப்புவகை மீன் பால். இறைச்சி, முட்டை போன்றவை) அதிகம் எடுப்பதன் மூலமும், நோய் ஏற்படாது தடுக்க முடியும் என்பதில் ஐயம் இல்லை. அத்துடன் வைத்தியரால் கொடுக்கப்படும் மருந்து வகைகளை தவறாது உட்கொள்ள வேண்டும். உரியநேரத்தில் சிகிச்சை பெறுவதன் மூலமும் தடுக்கலாம்.

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

சகல பாடசாலை அதிபர்களுடன் பொது அறிவுத்தேர்வு, சீருடை விநியோகம், பாடசாலை அபிவிருத்திச்சபை காசோலை வைப்பிலிடல் தொடர்பாக கலந்துரையாட வேண்டியிருப்பதால் பின்வரும் திகதியடிப்படையில் கல்விக் கோட்ட ரீதியாக நடைபெறும் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

இன்று பண்டத்தரிப்புக் கோட்டம், மானிப்பாய் இந்துக்கல்லூரி மு.ப. 9.00 மணி, யாழ். கல்விக்கோட்டம், யாழ் இந்து மகளிர் கல்லூரி மு. ப, 10-00 மணி, வடமராட்சிக் கல்விக் கோட்டம், வேலாயுதம் மகா வித்தியாலயம் பி. ப. 2-30 மணி.

நாளை வேலணைக் கல்விக் கோட்டம், கோட்டக் கல்வி அலுவலகம் மு. ப. 9-00 மணி

திங்கட்கிழமை மருதனார்மடக் கோட்டம், யா/ இராமநாதன் கல்லூரி மு. ப. 9 00 மணி, தென்மராட்சிக் கோட்டம், யா/ றிபேக் கல்லூரி, சாவகச்சேரி மு.ப. 9-00மணி.

## உருக்குலைந்த சடலம்

(யாழ்ப்பாணம்)

உருக்குலைந்த நிலையில் மேலும் ஒரு சடலம் நேற்று கிளாலியில் கரையொதுங்கியது.

நண்பகல் 10 மணியளவில் கரை ஒதுங்கிய இச்சடலம் அடையாளம் காணமுடியாத அளவு சிதைந்து காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## வீரவணக்க கூட்டம்

3-ம் மாதங்களில் (மார்ச்) வீரச்சாவை தழுவிக்கொண்ட வடமராட்சிக்கோட்ட - உடுப்பிட்டி வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்க் கூட்டம் இன்று இரவு 7.30 மணிக்குக் கரணவாய் வடக்கு, மேற்கு. கொத்தாவத்தை கலைஞானி சனசமூக நிலைய முன்றலில் இடம் பெறும்.

இவ்வீரவணக்கக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் சிறப்புப் பேச்சாளர்கள் உரை நிகழ்த்துவதுடன், கூட்ட முடிவில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (09)

மருத்துவபீட மாணவன் பலி

## பல்கலைக்கழக மாணவர்கள் கரும் கண்டனம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவபீட முதலாம் வருட மாணவன் செல்வன் ஞா.வில்சன் நிக்கலஸ் நேற்று முன்தினம் மாலை கிளாலிக் கரையில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலினால் மரணமடைந்தது குறித்து பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் தெரிவித்துள்ளனர்.

மருத்துவபீட மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில், மனித உயிர்களைப் பறிக்கும் சிறிலங்காப் பாதுகாப்புப் படையினரின் இவ்வாறான ஈவிரக்கமற்ற செயல்களை வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

## உலங்குவானூர்தி நோட்டம்

தீவகப் பகுதிகளில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் காரைநகர் கரையோரக் காவல் நிலைகளிலிருந்து நேற்று முன்தினம் இரவு 7.50 மணியளவில் மூளாய், பொன்னாலை மக்கள் குடியிருப்புக்களை நோக்கிப் பத்திற்கும் மேற்பட்ட எறிகணைகளை வீசினர்.

இவ் எறிகணைகள் மக்கள் குடியிருப்புக்களை அண்மித்த வயல் வெளிகளிலும், வெளி கொண்ட இடங்களிலும் வீழ்ந்து வெடித்ததினால் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லைஎனத் தெரிய வருகிறது.

மேலும் நேற்றுக் காலை 10.40மணியளவில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி ஒன்று தாழப்பறந்து மக்கள் குடியிருப்புக்களை நோட்டம் விட்டுச்சென்றதையும் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. (41)

## துப்பாக்கி பிரயோகம்

வவுனியாநொச்சிமோட்டை இராணுவக் காவலரண்களில் இருந்து நேற்று அதிகாலை 2.40 மணியளவில் பரவலாகத் துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன.சுமார் 15 நிமிடங்கள் படையினர் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தி.மு.க. மாநாட்டு பந்தலில் இரு பகுதியில் தீ பிடித்தது

கோவையில் தி மு.க. மூன்று நாள் மாநாட்டிற்காகப் போடப்பட்டிருந்த பந்தலில் நேற்று மாலை திடீரெனத் தீப்பற்றிக் கொண்டதில் பாதிக்கு மேல் எரிந்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தமாநாடுஇன்றுதொடங்கவிருந்தது.

பிற்பகல் சுமார் 3.30 மணியளவில் பந்தலின் வடமேற்குப் பகுதியும், வடகிழக்குப் பகுதியும்தீப்பிடித்தது என்றும், சுமார் 4.00 மணிக்கெல்லாம் பதின்மூன்று தீ அணைக்கும் இயந்திரங்கள்தீயைஅணைத்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கோவை கீழமேடு என்ற இடத்தில் 20ஏக்கர் நிலப்பரப்பில் இந்தப்பந்தல் போடப்பட்டிருந்தது. ஐந்து லட்சம் பேர் அமர்ந்து பார்ப்பதற்கு இதில் இட வசதி செய்யப்பட்டிருந்தது. பந்தலின் உள்ளே அமைக்கப்பட்டிருந்த மேடைப் பகுதிக்கு இந்தத் தீயினால் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

இந்தச் சம்பவம் ஒரு சதிச் செயல்என்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி கூறியிருக்கிறார். எத்தனை தீ பரவினாலும் அதைச் சகித்துக் கொள்ளும் ஆற்றல் தமது கட்சிக்கு உண்டு என்று திருச்சியில் செய்தியாளரிடம் பேசுகையில் கருணாநிதி கூறினார்.

### புலிகளின்

தற்போது ஆளுக்கொருதிக்காய் சென்றுள்ளனர்.

பல்வேறுபட்ட இனத்தலைவர்களிடையே ஓர் ஒருமித்த இணக்கமான தீர்வை பாராளுமன்ற சிறப்புக்குழுவால் காண முடியாதுபோன இந்நிலையில் வடக்குகிழக்கு பகுதிகளை இணைத்துவைத்திருக்க தம்மால் மட்டுமே முடியும் என்ற விடுதலைப் புலிகளின் கருத்தை- வாதத்தை மேலும் வலுப்படுத்தவே அது உதவுகின்றது பாராளுமன்ற சிறப்புக்குழு குழம்பியுள்ளது போல் தோன்றும் இந்நிலையிலும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்று பிரேமதாசா தெரிவித்துள்ளார். ஆனால் எதன் அடிப்படையில் இவரது நம்பிக்கை அமைந்துள்ளது என்பதுதான் சரியாக தெளிவாக தெரியவில்லை என குறிப்பிட்டது.

## பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு மணிக்கூட்டு வீதியில் உ௦ள யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் சபைத்தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும். (22)

## ராணுவ தளபதி வடபகுதி வந்தார்

(கொழும்பு)

இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்தினா தலைமையில் இராணுவ உயர் அதிகாரிகள் குழுவொன்று அண்மையில் பூநகரி, ஆனையிறவு இராணுவ முகாம்களுக்கு சென்று திரும்பியதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

## மாதாந்த உதவிப் பணம்

[யாழ்ப்பாணம்]

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான 1992 டிசம்பர் மாதக் கொடுப்பனவு அடுத்தவாரம் தொடக்கம் வழங்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. இ. இளங்கோவன் தெரிவித்துள்ளார். (22)

### வீரச்சாவு

ங்கா இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலில் 2ஆம் லெப்டினன்ட் மகாலிங்கம் / மயூரன் (சிவராஜா திலகராஜா, காளிகோவிலடி சாவகச்சேரி) வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த இவ்விரு வேங்கைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### வெளிநாட்டு

வெளிநாட்டு பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கடந்த மாதம் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் பி பி. ஸிக்கு வழங்கிய பேட்டி பெரும் உணர்வலைகளை எழுப்பியிருப்பதால் தலைவர் பிரபாகரனுக்கும் செய்தி உலகத்திற்கும் இடையே மேலும் தொடர்பு ஏற்படுவதை சிறிலங்கா பாதுகாப்பு படை விரும்பவில்லை என பி. பி. ஸி செய்தியாளர் சுவாக்கா நோசூப் இதுகுறித்து தெரிவித்துள்ளார்.

### பலாத்காரமாக

வின் இடைக்காலஅறிக்கையை ஆராய்ந்த பின்னரே தமிழ்க் குழுக்கள் இவ்வாறான குற்றச்சாட்டை ஐக்கியதேசியக்கட்சி உட்பட சிங்கள இனவாதக் கட்சிகள் மீது சுமத்தியுள்ளன.

இனவாத கட்சிகள் பாராளுமன்ற் தெரிவுக்குழு ஊடாக தமது செயற்பாட்டை கூட்டாகச் செய்ய முன் வந்துள்ளது என்றும் குற்றம் சாட்டியுள்ளன.

### காங்கேசன்

இப்பேச்சுவார்த்தைகளில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் ஆராயப்படும் எனவும் மீண்டும் பலாலிமுகாம்சென்று இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்திய பின்னர் இது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும் என இவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 25-03-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 8775

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-9758, 28-8810, 41-4719. 43-1019, 24-5454, 24-6972, 22-5857. 26 5157, 41-9395, 27-5077. 26-7217, 27-1927, 27-9090, 26-3130, 27-9719, 24-1635, 28-0248.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-7225, 26-4792, 41-5599, 41-5015, 27-2034, 42-9326, 41-8036, 24-0207, 28-2429, 43-4065, 28-2657, 40-1737, 24-6646, 26-5870.

## மரண அறிவித்தல்

### இராமன் கட்டச்சி

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியில் வசிப்பவருமான இராமன் கட்டச்சி 25 - 03 - 93 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (27 - 03 - 93) இவருடைய மருமகனான வல்லி கிருஷ்ணனின் (கலாசாலை வீதி, திருநெல்வேலி) இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

வல்லி கிருஷ்ணன் (மருமகன்)
(நல்லூர் பிரதேசசபை)
கிருஷ்ணன் நாகம்மா (மகள்)

(4568)

## கண்ணீர் அஞ்சலி

செல்வன்

### இராஜசூரியர் வில்சன் நிக்கலஸ்

(முதலாம் வருட மாணவன், மருத்துவபீடம்)

அன்னையின் மடியில்: 28-07-71 ஆண்டவனின் அடியில்: 24-03-93

24-03-93 இல் கிளாலிக் கடற்கரையில் ஏற்பட்ட துரதிர்ஷ்டமான சம்பவத்தினால் எம்மை விட்டுப்பிரிந்த நண்பன் நிக்கலஸ் அவர்களின் அகால மரணத்தையிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்,
26-03-93. யாழ்ப்பாணம். (4567)

## கண்ணீர்ப் பூக்கள்

கடந்த 24-03-93 அன்று கிளாலிக் கரையினில் ஷெல் தாக்குதலில் சிக்கித் தன் உயிர் நீத்த யாழ். மருத்துவபீட முதலாம் வருட மாணவன்

செல்வன்

### ஞா. வில்சன் நிக்கலஸ்

அன்னையின் மடியில்: 28-07-1971



ஆண்டவன் அடியில் 24-03-1993

நிக்கலஸ்! நீ எங்களுக்குப் புதியவன்,
ஆறு திங்கள் மட்டுமே அளவளாவிய போதும்,
ஆயிரம் வருடங்கள் பழகிய உணர்வு. ...
அன்று மாலை நீ கிளாலி நோக்கிப் பயணித்தபோது
நாங்கள் கண்ட உன் புன்சிரிப்பு......
இன்று எங்கள் கண்களில் நிழலாய். ....
ஓ! விதி கொடியது — அது
அன்பு, பண்பு எதையும் பார்ப்பதில்லை போலும்!
இழப்புகள்...., மருத்துவபீடத்தைப் பொறுத்தவரையில்
சகஜமாகிப் போனவை தான்
எனினும் உன் இழப்பு எம்மை
நிலைகுலைய வைக்கிறது புதியவனே,

அன்னாரைப் பிரிந்து தவிக்கும் குடும்பத்தவர், உறவினர், நண்பர்கள் யாவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், எமது கண்ணீர்ப் பூக்களைச் சொரிகின்றோம்.

– மருத்துவபீட மாணவர் ஒன்றியம்

(4569) (MSU)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம், இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம்ஆண்டு மார்ச் மாதம்26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது